THE
ISSUE BRIEF 5.0
BY GREENPEACE South Asia
செப்டெம்பர் 2026

ஆலோசனையிலிருந்து சம்மதம் வரை: இலங்கையின் கடல்சார் மற்றும் கரையோர நிர்வாகத்தில் சமூகங்களின் குரல்கள்

“அபிவிருத்தியை நாம் எதிர்க்கவில்லை, ஆனால் அது இவ்வாறு இடம்பெறக் கூடாது”
மீனவ சமூகத்தைச் சேர்ந்த பங்கேற்பாளர், கற்பிட்டி



கற்பிட்டியில் கடந்த 2026 ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இலக்குக் குழு கலந்துரையாடலில் பங்கேற்றவர் **(©Greenpeace)**

நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையின் கரையோரச் சமூகங்களைப் பொறுத்தவரை, உட்கட்டமைப்பு அபிவிருத்தி,சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களின் விளைவுகளை சந்தித்தபடியே வாழ்கின்றனர். எனினும், இந்த தீர்மானங்களை மேற்கொள்வதில் அவர்களுக்கு பெரும்பாலும் எவ்விதமான கணிசமான செல்வாக்கும் இருப்பதில்லை. நீர்கொழும்பு, ரேகவ, வாகரை, விடத்தல்தீவு மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சமூக மட்டக் கலந்துரையாடல்களிலும், வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதியில் உள்ள ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த 186 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்விலும் கலந்துகொண்டவர்கள், மீண்டும் மீண்டும் காணப்படும் “ஒப்புதல் இடைவெளியை“ (consent gap) சுட்டிக்காட்டினர். அதாவது, தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னரே பல சந்தர்ப்பங்களில் அதுபற்றிய தகவல்கள் மக்களுடன் பகிரப்படுகின்றன தொழில்நுட்ப ரீதியான திட்டமிடலின்போது உள்ளூர் மக்களிடம் காணப்படும் சூழலியல் அறிவு உரிய முறையில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை, மொழி மற்றும் நிர்வாகத் தடைகள் மக்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துகின்றன, அத்துடன், தமது நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதிக்கும் தீர்மானங்கள் குறித்து கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகள் இந்த சமூகங்களுக்கு குறைவாகவே உள்ளன.

சமூகங்கள் அபிவிருத்தியையோ அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்பையோ எதிர்க்கின்றன என்பதல்ல இங்கு பிரச்சினை. மாறாக, போதுமான தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும், அவை மேலும் பொறுப்புக்கூறலுடன் இருக்க வேண்டும், அத்துடன் நீண்டகால வாழ்வாதாரத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்பதையே சமூகங்கள் விரும்புகின்றன என்பதை ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மீன்பிடி மூலம் கிடைக்கும் மீன்களின் அளவு குறைந்து வருவது, மீன்பிடித் தளங்களில் அதிகரித்து வரும் அழுத்தம், நிலம் மற்றும் கரையோர வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் போவது, சட்டவிரோத மீன்பிடிக்கு எதிரான சட்ட அமுலாக்கம் பலவீனமாக இருப்பது மற்றும் காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய நிச்சயமற்ற நிலைமை அதிகரித்து வருவது குறித்து பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். அதேவேளை, சமூக மட்ட கண்காணிப்பு, இணை நிர்வாகம், வலுவான மீன்வள நிறுவனங்கள், ஆமைகள் முட்டையிடும் பகுதிகள் மற்றும் வனப் பகுதிகளை பாதுகாத்தல், சதுப்புநிலக் காடுகள், பவளப்பாறைகள் மற்றும் கடற்புற்கள் உள்ளிட்ட கரையோர வாழ்விடங்களை மீளமைத்தல், விஞ்ஞான நிபுணத்துவத்துடன் பாரம்பரிய சூழலியல் அறிவையும் முறையாக பயன்படுத்துதல், அத்துடன் மீனவ சமூகங்களுக்கும் அரசாங்கம் அல்லது ஒழுங்குமுறை அமைப்புகளுக்கும் இடையில் தகவல்கள் பரிமாறப்படுவதற்கான வலுவான வழிமுறைகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட நடைமுறை ரீதியான தீர்வுகளையும் அவர்கள் முன்வைத்தனர்.



கற்பிட்டி மீனவ சமூகத்தினர், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய நான்கு சீர்திருத்தங்களை இந்த அறிக்கை பரிந்துரைக்கின்றது:

1. உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பங்கேற்பு மற்றும் ஒப்புதலுக்கான தேசிய தரநிலையை உருவாக்குதல்
2. மொழி மற்றும் தகவல் தொடர்பான சமத்துவத்தை உறுதிப்படுத்துதல்
3. நில பயன்பாட்டு உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சமூகங்களின் இணை நிர்வாகத்தை முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துதல்
4. இலகுவில் அணுகக்கூடிய தீர்வு வழிமுறைகளையும் காலநிலை தொடர்பான பொறுப்புக்கூறல் வழிமுறைகளையும் உருவாக்குதல்.

இந்த சீர்திருத்தங்கள் அனைத்தும் ஒன்றாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம், சமூகங்களுக்கு தீர்மானங்கள் குறித்து தகவல் தெரிவிக்கப்படும் ஒரு முறையிலிருந்து, தீர்மானங்கள் மாற்ற முடியாத நிலையை அடைவதற்கு முன்னரே அவர்களின் அறிவு, உரிமைகள் மற்றும் உள்ளூர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட முன்னுரிமைகள், தீர்மானங்களை எடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு முறைக்கு இலங்கையை மாற்ற முடியும். அபிவிருத்தியை தடுப்பது இதன் நோக்கமல்ல. மாறாக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை நடவடிக்கைகள் மற்றும் நிலப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை முறையானவையாகவும், தொழில்நுட்ப ரீதியாக சரியானவையாகவும், சமூகங்களால் நீண்டகாலம் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும் இருப்பதையும், அவை உறுதியளிக்கும் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார பெறுபேறுகளை வழங்கக்கூடியவையாக இருப்பதையும் உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

இலங்கையின் சுற்றுச்சூழல் நிர்வாகம் தற்போது ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. உயிரியல் பல்வகைமை தொடர்பான உடன்படிக்கையின் (CBD) 7ஆவது தேசிய அறிக்கையை தயாரிப்பதற்கும், குன்மிங்-மொன்றியல் உலகளாவிய உயிரியல் பல்வகைமை கட்டமைப்பின் (KMGBF) இலக்குகளை அடைவதற்காக தேசிய உயிரியல் பல்வகைமை மூலோபாய செயற்திட்டத்தை (NBSAP) புதுப்பிப்பதற்கும் நாடு தயாராகி வரும் நிலையில், கள நிலவரம் ஒரு தெளிவான உண்மையை வெளிப்படுத்துகின்றது: உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்புதலுக்கு பதிலாக, நடைமுறை ரீதியான ஆலோசனைகளை மட்டுமே அடிப்படையாக கொண்டிருப்பதால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் தோல்வியடைந்து வருகின்றன.

இந்த அறிக்கையில், இலங்கையின் கரையோர பகுதிகளில் நீர்கொழும்பு (மேற்கு), ரேகவ (தெற்கு), வாகரை (கிழக்கு), கற்பிட்டி (வடமேற்கு), விடத்தல்தீவு (வடக்கு) ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்களில் கிடைத்த தகவல்களும், இரணைதீவு (வடக்கு மன்னார்) உள்ளிட்ட வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதியில் நடத்தப்பட்ட அளவுசார் ஆய்வின் பெறுபேறுகளும், தேசிய சட்டக் கட்டமைப்புகள் தொடர்பான ஆய்வும் ஒன்றாக தொகுக்கப்பட்டுள்ளன. இந்த ஆதாரங்கள் ஒரு கட்டமைப்பு ரீதியான “ஒப்புதல் இடைவெளி” இருப்பதை வெளிப்படுத்துகின்றன: அதாவது, தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னரே சமூகங்களுக்கு வழக்கமாக அது குறித்து தகவல் தெரிவிக்கப்படுகின்றது, தொழில்நுட்ப ரீதியான திட்டமிடலின்போது அவர்களின் பாரம்பரிய சூழலியல் அறிவு கருத்திற்கெள்ளப்படுவதில்லை, மேலும், தமது வாழ்வாதாரங்களை பாதிக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்காமல் இருப்பதற்கான அவர்களின் உரிமை சட்டத்திலும் நடைமுறையிலும் இல்லை.

“முதலில், எமது சொந்த கிராமங்களிலேயே எமது உரிமைகளை இழந்தோம், இரண்டாவதாக, எமது வாழ்வாதாரத்தை இழந்தோம், மூன்றாவதாக, இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பையும் இழந்தோம்.” (இலக்குக் குழு கலந்துரையாடலில் பங்கேற்றவர், கற்பிட்டி)



நீர்கொழும்பு மீனவ சமூகத்தினர், ஜூன் 2026
(©Greenpeace)

வெளிவந்த நான்கு முக்கிய விடயங்கள்

முதலாவது, ஆலோசனை பெறும் செயற்பாடு என்பது பல சந்தர்ப்பங்களில் பங்கேற்பாக அல்லாமல், தகவல் தெரிவிக்கும் செயற்பாடாகவே கருதப்படுகிறது. பத்திரிகை அறிவித்தல்கள், இறுதிக்கட்டத்தில் நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் அதிக பணிச்சுமையைக் கொண்ட அதிகாரிகள் ஊடாக தகவல்களை பகிர்தல் என்பன, பாதிப்பினை எதிர்கொள்ளும் சமூகங்களுக்கு உரிய நேரத்தில் தகவல்களை பெறுவதற்கும், எளிதில் அணுகக்கூடிய வகையில் பங்கேற்பதற்கும், தீர்மானங்களை பாதிக்கும் வகையில் தமது கருத்துகளை முன்வைப்பதற்கும் போதுமான வாய்ப்புகளை வழங்குவதில்லை.

இரண்டாவது, மொழி, நிலப் பயன்பாட்டு உரிமை, புவியியல் அமைவிடம் மற்றும் அதிகாரம் ஆகியவை மக்களை பங்கேற்பிலிருந்து விலக்கி வைக்கும் நிலைமையை உருவாக்குகின்றன. சிங்கள மொழியில் மட்டும் வழங்கப்படும் தகவல்கள், பாதுகாப்பற்ற அல்லது முறையாக அங்கீகரிக்கப்படாத பாரம்பரிய நில பயன்பாட்டு உரிமைகள், பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்ட நிலங்களுக்கான கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் நிறுவனங்களின் பலவீனமான தொடர்ச்சியான நடவடிக்கைகள் ஆகியவை, சமூகங்கள் சமமான அடிப்படையில் பங்கேற்பதை தடுக்கக்கூடும்.

மூன்றாவது, சமூகங்களின் பங்கேற்பு குறைவாக இருப்பது நடைமுறை ரீதியில் நிர்வாக தோல்விகளுக்கு வழிவகுக்கின்றது. போதுமான அளவு உள்ளூர் மக்களின் கருத்துக்கள் பெறப்படாததால் உட்கட்டமைப்புகள் முறையாக திட்டமிடப்படுவதில்லை, நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடி தொடர்பான முரண்பாடுகள் சரியாக நிர்வகிக்கப்படுவதில்லை, வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன, மேலும் சட்டங்களை அமுல்படுத்துவதிலும் இடைவெளிகள் ஏற்படுகின்றன என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

நான்காவது, சமூகங்கள் ஏற்கனவே இயற்கை வளங்களை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்று செயற்பட்டு வருகின்றன. உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பங்கேற்பு என்பது பல்லுயிர் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்திற்கேற்ப தங்களை மாற்றிக்கொள்ளுதல் மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை வலுப்படுத்த முடியும் என்பதையும், அவற்றுக்கு தடையாக இருக்க வேண்டியதில்லை என்பதையும் அவர்களின் முன்மொழிவுகள் காட்டுகின்றன.



கற்பிட்டி மீனவர் சமூகம், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

முக்கிய கண்டுபிடிப்புகள்:

- **நிர்வாகத் தோல்வி:** கற்பிட்டியின் சுற்றுலா மையங்கள் முதல் வாகரையின் போருக்குப் பிந்தைய பகுதிகள் வரை, உட்கட்டமைப்பு திட்டங்கள் (உதாரணமாக, மின்சாரக் கம்பிகள், துறைமுகங்கள்) மற்றும் கைத்தொழில் விரிவாக்கங்கள் என்பன, அர்த்தமுள்ள ஆலோசனைகள் எதுவுமின்றி முன்னெடுக்கப்படுவதாக சமூகங்கள் தெரிவிக்கின்றன.

- **கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்பு:** கற்பிட்டியில், மொழித் தடைகள் (சிங்கள மொழியில் மட்டும் வெளியிடப்படும் அறிவித்தல்கள்) மற்றும் அதிக பணிச்சுமையை கொண்ட உள்ளூர் நிர்வாகம் ஆகியவை தமிழ் பேசும் சமூகங்கள் பங்கேற்பதை தடுக்கின்றன. இதனால், "ஆலோசனை" என்பது வெறும் பெயரளவிலான ஒன்றாக மாறியுள்ளது. சமூகங்களின் கருத்துக்கள் பெறப்படாமலேயே அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. இதனால், "அவர்கள் எங்களை பற்றி சிந்திக்கவில்லை... எமது வாழ்வாதாரங்களை பற்றியும் சிந்திக்கவில்லை" என்ற வேதனையான நிலை வெளிப்படுகின்றது.

- **சுற்றுச்சூழல் நெருக்கடி:** விடத்தல்தீவில், ஒரு காலத்தில் சிறந்த வருமானத்தை ஈட்டித்தந்த சேற்றுநண்டு பிடிப்பு 1990களில் கிட்டத்தட்ட பூச்சிய நிலைக்கு குறைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு இறால் பண்ணைகளால் ஏற்பட்ட மாசுபாடு காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது. வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதியில் பெறப்பட்ட பதில்களில், கடந்த 5 ஆண்டுகளில் மீன்வளம் குறைந்துள்ளதாகவும், பிடிக்கப்படும் மீன்களின் அளவு குறைந்துள்ளதாகவும் 95மூ பங்கேற்பாளர்கள் தெரிவித்துள்ளனர். சட்டவிரோத மீன்பிடி முறைகள் (இழுவைமடி மீன்பிடி) மற்றும் கட்டுப்பாடின்றி முன்னெடுக்கப்படும் கடலட்டை வளர்ப்பு ஆகியவற்றுடன் இதற்கு நேரடி தொடர்பு இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- **சட்ட வெற்றிடம்:** தற்போதைய 2026 தேசிய சுற்றுச்சூழல் (திருத்த) சட்டமூலத்தில், கட்டாயமான சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் தொடர்பான ஏற்பாடுகள் இல்லை. இதனால், சுற்றுலா தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் சமூகங்கள் இடம்பெயர செய்யப்படுவதற்கும், புதிய ஈரநில பிரகடனங்களின் கீழ் அவர்கள் குற்றவாளிகளாக கருதப்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

- **காலநிலை தொடர்பான பொறுப்புக்கூறல்:** காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதத்தின் தாக்கங்களை (உதாரணமாக, டிட்வா சூறாவளி, மாறிவரும் மழைவீழ்ச்சி முறைகள்) சமூகங்கள் நேரடியாக எதிர்கொண்டு வருகின்றன. ஆனால், அவர்களுக்கு போதுமான இழப்பீடோ அல்லது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலான திட்டமிடலில் பங்கேற்பதற்கான வாய்ப்போ வழங்கப்படவில்லை.

- **தீர்வு:** சமூகங்கள் அபிவிருத்திக்கு எதிரானவை அல்ல, அவை இயற்கை வளங்களை பொறுப்புடன் பாதுகாத்து பயன்படுத்துவதையே ஆதரிக்கின்றன. அனைத்து உயிரியல் பல்வகைமை மற்றும் காலநிலை நடவடிக்கைகளுக்கும் குறைந்தபட்ச தரநிலையாகசுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

அறிமுகம்:

கலந்துரையாடலில் இருந்து ஒதுக்கப்பட்ட இயற்கை வளங்களின் பாதுகாவலர்கள்



மன்னார் மீனவர் சமூகம், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

இலங்கையின் கரையோரம் என்பது மணலும் கடலும் கொண்ட ஒரு எல்லை மட்டுமன்றி, தலைமுறை தலைமுறைகளாக அதன் பாதுகாவலர்களாக செயற்பட்டு வரும் ஆயிரக்கணக்கான சமூகங்களின் உயிர்நாடியாகும். ரேகவ பிரதேசத்தின் ஆமைகள் முட்டையிடும் பகுதிகள் முதல், இரணைதீவு உள்ளிட்ட வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதியின் கடற்புற்கள் நிறைந்த பகுதிகள் வரை, உள்ளூர் மீனவர்கள், பெண்கள் மற்றும் பழங்குடியின தலைவர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்வது தொடர்பான ஆழமான, தலைமுறைகளாக கடத்தப்பட்ட அறிவைக் கொண்டுள்ளனர். பருவமழை எப்போது மாறும், மீன்கள் எங்கு இனப்பெருக்கம் செய்கின்றன, வளங்கள் குறையாத வகையில் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற விடயங்களை அவர்கள் நன்கு அறிவர். இந்த அறிவானது, பல நூற்றாண்டுகளாக மக்களின் வாழ்வாதாரத்தையும் தீவின் உயிரியல் பல்வகைமையையும் நிலைநிறுத்தி வந்துள்ளது.

எனினும், இன்று தமது சொந்த வாழ்விடங்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும் இடங்களில் இருந்து இந்த பாதுகாவலர்கள் திட்டமிட்ட வகையில் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

உலகளாவிய உயிரியல் பல்வகைமை இலக்குகளை அடைவதற்கும், பாரியளவிலான அபிவிருத்திகளை ஈர்ப்பதற்கும் இலங்கை அவசரமாக செயற்பட்டு வரும் நிலையில், கற்பிட்டியில் சுற்றுலா தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் முதல் மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள் மற்றும் தெற்கில் இறால் பண்ணைகள் வரை, நிலத்தைப் பற்றி மிக நன்றாக அறிந்தவர்களின் குரல்கள் மௌனமாக்கப்பட்டு வருகின்றன. அவர்களிடம் ஆலோசனை பெறப்படுவதில்லை, அவர்களுக்கு வெறுமனே தகவல் மாத்திரம் தெரிவிக்கப்படுகின்றது, சில சந்தர்ப்பங்களில் அதுவும் தெரிவிக்கப்படுவதில்லை. விடத்தல்தீவில், பாதுகாக்கப்பட்ட பகுதி தொடர்பான பிரகடனத்தின் எல்லைகளை மீறியதற்காக தண்டிக்கப்பட்ட பின்னரே அது குறித்து மக்கள் அறிந்துகொண்டனர். அவர்கள் பங்காளிகளாக கருதப்படுவதில்லை, அவர்கள் தடைகளாகவே கருதப்படுகின்றனர். இதன் விளைவாக, தோல்வியடைந்த திட்டங்கள், சீரழிந்த சுற்றுச்சூழல் கட்டமைப்புகள் மற்றும் மேலும் தீவிரமடைந்து வரும் வறுமை ஆகியவை தொடர்ச்சியாக ஏற்படுகின்றன. துறைமுகங்கள் தவறான திசையை நோக்கி அமைக்கப்படுகின்றன, முக்கியமான இனப்பெருக்கப் பகுதிகள் ஊடாக மின்சாரக் கம்பிகள் அமைக்கப்படுகின்றன, மேலும், மாசுபாட்டை மட்டுமே விட்டுச் செல்லும் கைத்தொழில்களுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையானது, நீர்கொழும்பு, ரேகவ, வாகரை, கற்பிட்டி, விடத்தல்தீவு (மன்னார்), மற்றும் இரணைதீவு உள்ளிட்ட வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதி ஆகிய இடங்களில் உள்ள சமூகங்களின் நேரடி சாட்சியங்களின் அடிப்படையில், இலங்கையின் கரையோர நிர்வாகத்தின் உண்மை நிலையை எடுத்துரைக்கின்றது. இது ஒரு முக்கியமான "ஒப்புதல் இடைவெளியை" வெளிப்படுத்துகின்றது. அதாவது, உயர்மட்ட கொள்கை வாக்குறுதிகளுக்கும் களத்தில் காணப்படும் உண்மை நிலைக்கும் இடையிலான ஆபத்தான தொடர்பின்மையை இது வெளிப்படுத்துகின்றது.

ஆனால், இது புறக்கணிக்கப்பட்ட ஒரு கதையை மட்டுமே கூறுவதல்ல, நிலைமையை சரிசெய்வதற்கான அழைப்பும் ஆகும். சர்வதேச நீதிமன்றம் அண்மையில் உறுதிப்படுத்தியுள்ளதுபோல், சுற்றுச்சூழலை பாதுகாப்பதும் மனித உரிமைகளை மதிப்பதும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. காலநிலை நெருக்கடியின் முன்னணியில் நிற்கும் சமூகங்களை பொறுத்தவரை அவர்கள் காப்பாற்றப்படுவதற்காக காத்திருக்கும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர், மாறாக அவர்களின் குரல்களுக்கு செவிசாய்க்கப்பட்டால் தீர்வுகளை வழங்கக்கூடியவர்கள். இலங்கைக்கு நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஒரே வழி, சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) என்பது ஒரு விருப்பமாக இல்லாமல், அதற்கான அடிப்படையாக அமையும் முறையே என இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. சமூகங்களுக்காக தீர்மானிப்பதை நிறுத்திவிட்டு, அவர்களுடன் இணைந்து தீர்மானங்களை எடுக்க வேண்டிய நேரம் இதுவாகும்.



விடத்தல்தீவு மீனவர் சமூகம், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

2030ஆம் ஆண்டுக்குள் இயற்கைப் பகுதிகளில் 30% பாதுகாக்கப்படுவதை, அதாவது உயிரியல் பல்வகைமை தொடர்பான உடன்படிக்கையின் (CBD) கீழ் நிர்ணயிக்கப்பட்ட "30X30" இலக்குகளை, நம்பகமானதும் முறையானதுமான வகையில் நடைமுறைப்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்திற்கேற்ப பயனுள்ள வகையில் தழுவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இலங்கை அரசாங்கம் சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலை (FPIC) சட்ட ரீதியாக நிறுவனமயப்படுத்த வேண்டும். இதன்போது, பழங்குடியின மக்களையும் உள்ளூர் சமூகங்களையும் வெறுமனே தொடர்புடைய தரப்பினராக கருதாமல், தமது பிரதேசங்களின் உரிமைகளை கொண்டவர்களாகவும் அவற்றை முதன்மையாக பாதுகாத்து பராமரிப்பவர்களாகவும் அங்கீகரிக்க வேண்டும். அத்துடன், திட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மாற்ற முடியாத நிலையை அடைவதற்கு முன்னரே, அவர்களின் அறிவும் ஒப்புதலும் தீர்மானங்களை எடுப்பதில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.



மன்னார் மீனவர் சமூகம், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) என்பது வழக்கமான பொதுமக்கள் ஆலோசனையிலிருந்து வேறுபட்டதாகும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தின் கருத்தின்படி [1]:

"சுதந்திரமானது என்பது எந்தவிதமான கட்டாயப்படுத்தலும், அச்சுறுத்தலும் அல்லது கையாளுதலும் இல்லாமல் இருப்பதை குறிக்கின்றது. முன்கூட்டிய என்பது எந்தவொரு அனுமதியும் வழங்கப்படுவதற்கு அல்லது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் போதுமான காலத்திற்கு முன்னரே ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பதையும், பழங்குடியின மக்களிடம் ஆலோசனை நடத்தி ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அவசியமான கால அவகாசத்தை மதிக்க வேண்டும் என்பதையும் குறிக்கின்றது. தகவலறிந்த என்பது முன்மொழியப்படும் திட்டம் அல்லது நடவடிக்கை தொடர்பான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தகவல்கள் வழங்கப்படுவதை குறிக்கின்றது. இதில், திட்டம் அல்லது நடவடிக்கையின் தன்மை, அளவு, முன்னெடுக்கப்படும் வேகம், மீள மாற்றக்கூடிய தன்மை மற்றும் நோக்கம், திட்டத்தின் நோக்கம் மற்றும் கால அளவு, திட்டம் முன்னெடுக்கப்படும் இடம் மற்றும் பாதிக்கப்படும் பகுதிகள், பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்கள், அத்துடன் ஏற்படக்கூடிய அபாயங்கள் தொடர்பான ஆரம்ப மதிப்பீடு, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடக்கூடிய பணியாளர்கள், மற்றும் திட்டத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான நடைமுறைகள் ஆகியவை அடங்கும்."

1. பின்னணியும் காரணமும் : இலங்கைக்கான முக்கியத்துவம்

1.1. காலநிலை மற்றும் உயிரியல் பல்வகைமை பாதிப்புக்குள்ளாகும் நிலை

இலங்கையின் கரையோர சமூகங்கள் காலநிலை நெருக்கடியின் நேரடி தாக்கங்களை எதிர்கொண்டு வருகின்றன. சுற்றுச்சூழல் மீதான அழுத்தங்கள் வேகமாக அதிகரித்து வருவதை கள அறிக்கைகள் பதிவு செய்துள்ளன:

- இயற்கை சூழலில் ஏற்படும் தாக்கங்கள்: கடல் மட்டம் உயர்வது, நிலத்தடி நீருடன் கடல்நீர் கலத்தல் மற்றும் மாறிவரும் மழைவீழ்ச்சி முறைகள் ஆகியவை இதில் உள்ளடங்கும். உதாரணமாக, கற்பிட்டியில், நிலத்தடி நீர் அதிகளவில் உவர்ப்பாக மாறி வருவதையும், தாவரங்கள் கருமையாகி வருவதையும், வெப்பநிலை அதிகரிப்பதையும், பருவமழை காலங்களை முன்கூட்டியே கணிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதையும் பங்கேற்பாளர்கள் தெரிவிக்கின்றனர். வடக்கு மன்னார் பகுதியில், நீர் வெப்பநிலை அதிகரிப்பதும், கடும் மழையின்போது நன்னீர் கடலில் கலப்பதும், வாழ்விடங்கள் அழிவதற்கான முக்கிய காரணிகளாக இருப்பதாக பதில் வழங்கியவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- பொருளாதாரம் சாராத இழப்பு: பாரம்பரிய சூழலியல் அறிவு (TEK) அழிந்து வருதல். வானிலை முறைகள் கணிக்க முடியாதவையாக மாறுவதால், மீன்பிடி மற்றும் விவசாயத்திற்காக தலைமுறை தலைமுறையாக பயன்படுத்தப்பட்டு வந்த காலநிலை நாட்காட்டி முறைகள் பாதிக்கப்படுகின்றன.

- வாழ்வாதாரத்தின் மீதான அழுத்தம்: வளங்கள் குறைந்து வருவதாலும் (கைத்தொழில் ரீதியான அளவுக்கு அதிகமான மீன்பிடி, சுற்றுலா மற்றும் வாழ்விட அழிவு காரணமாக) செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்து வருவதாலும் சிறியளவில் மீன்பிடி தொழிலை செய்பவர்கள் இரட்டை நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். விடத்தல்தீவில், அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட சேற்றுநண்டுகள் தற்போது அரிதாகிவிட்டதால் உள்ளூர் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ஒன்றுடன் ஒன்று குறுக்கிடும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் எல்லைகள் குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பையும் கட்டுப்படுத்துகின்றன. கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பெரும்பாலான பகுதிகளில், வர்த்தக ரீதியான மீன்பிடி அழுத்தம் மற்றும் மாசுபாடு, வளங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துதல் ஆகியவற்றால் மீனவர்கள் கடலுக்குள் மேலும் தொலைவுக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் அபாயங்களும் கடன்சுமையும் அதிகரிக்கின்றன. வடக்கு மன்னார் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் தரவுகளின்படி, வருமான நிலைமை மோசமடைந்துள்ளதாக 70மூ குடும்பங்கள் தெரிவித்துள்ளன. இதனால், பலர் தமது மீன்பிடி பகுதிகளை மாற்றவோ அல்லது பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த இடங்களை கைவிடவோ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



கரையோர பழங்குடியின தலைவர் அம்பலவாகே நல்லதம்பி வேலாயுதம், ஜூன் 2026 **(©Greenpeace)**

1.2. ஆட்சி நிர்வாகத்தில் உள்ள இடைவெளி

வரலாற்று ரீதியாக, இலங்கையில் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (PAs)> பாதுகாக்கப்பட்ட கடல் பகுதிகள் (MPAs) மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIAs) தொடர்பான அணுகுமுறை மேலிருந்து கீழ் நோக்கியதாகவும், தொழில்நுட்ப ரீதியானதாகவும் இருந்து வந்துள்ளது.

- **ஆலோசனை என்பது தகவல் பகிர்வாக மட்டும் இருப்பது**: தற்போதைய சட்ட நடைமுறைகள் (உதாரணமாக, பத்திரிகை அறிவித்தல்கள்) "அறிவித்தல்" என்பதையே கொண்டுள்ளன, "பங்கேற்பு" என்பதை அல்ல. உதாரணமாக, கற்பிட்டியில் அறிவித்தல்கள் பெரும்பாலும் சிங்கள மொழியில் மட்டுமே வெளியிடப்படுவதால், தமிழ் பேசும் மக்களுக்கு அவை சென்றடைவதில்லை. மேலும், வர்த்தமானி அறிவித்தல்கள் நடைமுறைக்கு வந்த பின்னரே, பத்திரிகைகள் மூலம் அவை குறித்து தாம் அறிந்துகொள்வதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்: "எமக்கு மிகவும் தாமதமாகவே தகவல்கள் கிடைக்கின்றன... அது ஏற்கனவே நடைமுறைக்கு வந்த பின்னரே எமக்கு தெரியவருகின்றது."

- **"கோட்டை போன்ற பாதுகாப்பு" அணுகுமுறையின் ஆபத்து:** உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாவிட்டால், 2030ஆம் ஆண்டுக்குள் நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பில் 30% பாதுகாக்க வேண்டும் என்ற உலகளாவிய முயற்சியானது, சமூகங்களை மேலும் புறக்கணிக்கும் பாதுகாப்பு அணுகுமுறைகளை விரிவுபடுத்தும் அபாயம் உள்ளது. இது "பசுமை பறிப்பு" எனப்படும் நிலைக்கு வழிவகுக்கலாம். அதாவது, சமூகங்களின் ஒப்புதல் இல்லாமல், குறிப்பிட்ட பரப்பளவு இலக்குகளை அடைவதற்காக அவர்கள் தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர செய்யப்படலாம். விடத்தல்தீவு, 2016ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட வலயமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. ஆனால், 2019ஆம் ஆண்டு அங்கு அறிவிப்புப் பலகைகள் அமைக்கப்பட்ட பின்னரே குறித்த பாதுகாப்பு வலயம் தொடர்பாக மக்கள் அறிந்துகொண்டனர்.




ரேகவ மீனவர் சமூகம், ஜூன் 2026 **(©Greenpeace)**

1.3. வாய்ப்பு: NBSAP மற்றும் CBD தேசிய அறிக்கையிடல்

இலங்கையின் தேசிய உயிரியல் பல்வகைமை மூலோபாய செயற்திட்டம் (NBSAP) மற்றும் 7ஆவது தேசிய அறிக்கையை தற்போது திருத்தி அமைக்கும் பணியானது, இந்த நிலைமையை சரிசெய்வதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பை வழங்குகின்றது. சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலை (FPIC) இதில் ஒருங்கிணைப்பது மனித உரிமைகள் தொடர்பான ஒரு கடமை மட்டுமல்லஜ2ஸ, பயனுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான முன்நிபந்தனையும் ஆகும். உலகளாவிய மற்றும் உள்நாட்டு அனுபவங்கள் காட்டுவது போல், உள்ளூர் சமூகங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்போது அவை தோல்வியடைகின்றன. மாறாக, உள்ளூர் சமூகங்கள் அவற்றிற்கு தலைமைத்துவம் வழங்கும்போது, அவை சிறப்பாக செயற்படுகின்றன.

2. ஆய்வு முறைமை: சமூகங்களின் கருத்துக்களை செவிமடுத்தல்



ரேகவ மீனவர் சமூகம், ஜூன் 2026 **(©Greenpeace)**

இந்த அறிக்கையானது, பங்கேற்பு அடிப்படையிலான செயற்பாட்டு ஆய்வை அடிப்படையாகக் கொண்டது. இதில் இடஞ்சார் வரைபடம் உருவாக்குதல், பண்புசார் ஆய்வு, அளவுசார் தரவுகள் மற்றும் நிறுவன ரீதியான ஆய்வு ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. அணுகுமுறை: சமூக பங்கேற்புடன் வரைபடம் உருவாக்குதல் (PCM), பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய இலக்குக் குழு கலந்துரையாடல்கள் (FGDs), முக்கிய தகவல் வழங்குநர்களுடனான நேர்காணல்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட சமூக பொருளாதார கணக்கெடுப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான கலப்பு முறையிலான ஆய்வு வடிவமைப்பாகும்.

- **இடங்கள்:**
  - நிறைவுசெய்யப்பட்ட இலக்குக் குழு கலந்துரையாடல்கள் நீர்கொழும்பு (மேற்கு), ரேகவ (தெற்கு), வாகரை (கிழக்கு), கற்பிட்டி (மேற்கு), விடத்தல்தீவு (மன்னார், வடக்கு)
  - நிறைவுசெய்யப்பட்ட கணக்கெடுப்பு: இரணைதீவு / பூநகரி பிரிவில் (வடக்கு மன்னார்) உள்ள 9 கிராமங்களில் நடத்தப்பட்டது.

- **பங்கேற்பாளர்கள் :** ஒவ்வொரு இலக்குக் குழு கலந்துரையாடலிலும் 6 முதல் 32 பேர் வரை பங்கேற்றனர். கணக்கெடுப்பில் 186 பேர் பதிலளித்தனர். இவர்களில் சிறியளவிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பழங்குடியின தலைவர்கள் உள்ளடங்குகின்றனர்.

- **நெறிமுறை :** ஆய்வினை ஆரம்பிக்க முன்னர், சமூகங்களின் கூட்டு சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (சீஜஊ) பெறப்பட்டது. தரவுகளின் உரிமை சமூகங்களிடமேஇருக்கும். மேலும், குறிப்பிட்ட சாட்சியங்களை பயன்படுத்துவதை தடுக்கவும் சமூகங்களுக்குஉரிமை உள்ளது.




நீர்கொழும்பு மீனவர் சமூகம், ஜூன் 2026 **(©Greenpeace)**

இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலம் சமூகங்களின் அனுபவங்கள், உள்ளூர் சூழலியல் அறிவு, வாழ்வாதாரம் தொடர்பான கரிசனைகள், பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் தொடர்பான அவர்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. மீன்பிடி முறைகள், மீன்வளம், பவளப்பாறைகள், கண்டல் தாவரங்கள், நீர் கிடைக்கும் தன்மை, வானிலை முறைகள், கடலரிப்பு மற்றும் சமூகங்களின் வாழ்வாதாரங்களில் கடந்த காலத்திலும் தற்போதும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து பங்கேற்பாளர்கள் தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். அத்துடன், தமது பகுதிகளில் ஏற்பட்ட சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் குறித்தும் அவர்கள் கருத்துக்களை தெரிவித்தனர். 1970களில் இருந்து ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களை அடையாளம் காண்பதற்காக வரலாற்று காலவரிசை பயன்படுத்தப்பட்டது. இதில் உள்நாட்டு மற்றும் அரசியல் மோதல்களின் தாக்கங்கள், மீன்பிடி மற்றும் கரையோர கடற்பகுதிகளுக்கான அணுகல் மீதான கட்டுப்பாடுகள், சுனாமி மற்றும் சூறாவளி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள், வறட்சிகள், இறால் பண்ணைகளின் விரிவாக்கம் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் நிறுவப்பட்டமை ஆகியவை உள்ளடங்குகின்றன.

கரையோர சூழலமைப்புகள் சமூகங்களுக்கு வழங்கும் நன்மைகள் குறித்தும் கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டது. குறிப்பாக, அவை மீன்பிடி தொழில், உணவுப் பாதுகாப்பு, பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு வழங்கும் பங்களிப்பு குறித்து பங்கேற்பாளர்கள் கலந்துரையாடினர். பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் நிர்வாகம் தொடர்பான சவால்கள் குறித்தும் பங்கேற்பாளர்கள் கருத்துக்களை தெரிவித்தனர். இதில் மட்டுப்படுத்தப்பட்ட ஆலோசனை, தெளிவற்ற எல்லைகள், பலவீனமான சட்ட அமுலாக்கம், போதுமான தகவல் பகிர்வு இல்லாமை, அரசாங்கத்தின் போதிய ஆதரவு இல்லாமை மற்றும் சமூகங்களுக்கும் தீர்மானங்களை எடுப்பவர்களுக்கும் இடையில், பயனுள்ள வகையிலான முறைப்பாட்டு மற்றும் கருத்துக்களைப் பகிர்வதற்கான வழிமுறைகள் இல்லாமை ஆகியன உள்ளடங்குகின்றன.

சமூகங்களால் முன்னெடுக்கக்கூடிய தீர்வுகளையும் பங்கேற்பாளர்கள் அடையாளம் கண்டனர். இதில் மாற்று வாழ்வாதார வாய்ப்புகள், மீன்பிடி வலைகளை சிறந்த முறையில் நிர்வகித்தல், வலைகளை பழுதுபார்ப்பதில் பெண்களின் பங்களிப்பு மற்றும் கண்காணிப்பு மற்றும் இணை நிர்வாகத்தில் சமூகங்களின் பங்கேற்பு ஆகியவை உள்ளடங்குகின்றன. உதாரணமாக, கரையோர சூழலமைப்புகளை பாதுகாத்து அவற்றின் வளங்களை மீண்டும் அதிகரிப்பதற்காக, கண்டல் தாவரங்கள் உள்ள பகுதிகளில் இருந்து கடலை நோக்கி 100 மீற்றர் தூரத்திற்குள் மீன்பிடி நடவடிக்கைகளை தடை செய்வதற்கான கூட்டு உடன்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மீன்வளத்தை அதிகரிப்பதற்கான வேறு சில நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டன. இனப்பெருக்க பகுதிகளை பாதுகாத்தல், இந்திய மீன்பிடி படகுகள் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைவதை தடுப்பதற்காக மீன்பிடி பகுதிகளின் எல்லைகளை தெளிவாகக் குறித்தல் மற்றும் இழுவைமடி மீன்பிடிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தல் ஆகியவை அவற்றில் அடங்கும். சில சந்தர்ப்பங்களில், தீர்வுகளைத் தேடும் முயற்சிகள், நிலம், அணுகல் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான தமது உரிமைகளுக்காக மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை அணுகுவதற்கும் வழிவகுக்கின்றன. மேலும் சிலர், தாம் சார்ந்திருக்கும் இயற்கையை பாதுகாப்பதற்கும், அதன் ஆசீர்வாதத்தை பெறுவதற்கும், சிறந்த விளைச்சலை பெறுவதற்கும் தமது மூதாதையர்களின் சடங்குகள் மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை தொடர்ந்து பின்பற்றுகின்றனர்.



இரணைதீவு மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

பிரதேசவாரியாக FGD மற்றும் சமூக சூழலியல் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்

இந்த அறிக்கைக்கான ஆதாரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கரையோர மற்றும் நீரேரிகளை சார்ந்து வாழும் சமூகங்கள்

பிரதேசம்	மாகாணம்	பங்கேற்பாளர்கள் / பதிலளித்தவர்கள்	வயது வரம்பு	பிரதான பிரதிநிதித்துவம்	கலந்துரையாடல் இடம்பெற்ற மொழி
நீர்கொழும்பு	மேற்கு	23	36 - 70	மீனவர்கள், பெண்கள், சிவில் சமூக அமைப்புகள்	சிங்களம்
ரேகவ	தெற்கு	30	25 - 68	மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள	சிங்களம்
வாகரை	கிழக்கு	6	36 - 60	ஆதிவாசி சமூகத்தினர், மீனவர்கள், பெண்கள், தலைவர்கள்	சிங்களம் / தமிழ்
கற்பிட்டி	வடமேல்	32	35 - 64	மீனவர்கள், பெண்கள், இளைஞர்கள், வாழ்வாதாரக் குழுக்கள்	தமிழ்
விடத்தல்தீவு	வடக்கு	11	35 - 65	மீனவர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள்	தமிழ்
வடக்கு மன்னார் (இரணைதீவு உள்ளிட்ட வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையிலான பகுதி)	வடக்கு	186 நேர்காணல்கள் 102 குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டன	18 - 71+	மீனவர்கள், கடலுயிரின வளர்ப்பில் ஈடுபடும் குடும்பங்கள், பெண்கள், எருமைத்தீவு மீனவ சமூகத்தினர்	தமிழ்

மூல ஆதாரம்: FGDகளுக்கான களக் குறிப்புகள் மற்றும் வடக்கு மன்னார் / இரணைதீவு அடிப்படை அறிக்கை, கட்டம் I — செப்டெம்பர் 2026.

ஆய்வு முறையில் சமூகங்களின் கருத்துக்கள், அவர்களின் நேரடி அனுபவங்கள் மற்றும் உள்ளூர் மற்றும் பழங்குடியின அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. சமூகங்களின் நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதிக்கும் தீர்மானங்களில் ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவம் தொடர்பான அவர்களின் அனுபவங்களும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன. இது சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) தொடர்பான விடயங்களை புரிந்துகொள்ள உதவியது. இந்த அறிக்கையில் முன்வைக்கப்படும் பெறுபேறுகள் பங்கேற்பாளர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கின்றன. எனவே, பண்புசார் மற்றும் பங்கேற்பு அடிப்படையிலான ஆய்வு முறையின் மூலம் சமூகங்கள் தெரிவித்த அனுபவங்களாகவே இவற்றை புரிந்துகொள்ள வேண்டும். வடக்கு மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட சமூக சூழலியல் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள், அளவுசார் மூலமான தரவுகளின் புள்ளிவிபர பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டவை.

3. கண்டறியப்பட்ட விடயங்கள்: களத்தில் காணப்படும் உண்மை நிலை

பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து இலக்குக் குழு கலந்துரையாடல்களிலிருந்தும் (குபுனு) பெறப்பட்ட தரவுகளை இந்தக கண்டறியப்பட்ட விடயங்கள் ஒருங்கிணைத்து முன்வைக்கின்றன. வெவ்வேறு புவியியல் மற்றும் அரசியல் சூழல்களிலும் சமூகங்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகின்றன என்பதில் ஒரே மாதிரியான போக்கு இருப்பதை இவை வெளிப்படுத்துகின்றன. அனைத்து பகுதிகளிலும், தீர்மானங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டதாகவே சமூகங்கள் தெரிவித்தன. எனினும், இதற்கு பயன்படுத்-தப்படும் நடைமுறைகள் ஒவ்வொரு பகுதியிலும் வித்தியாசமாக காணப்பட்டன.

தொகுதி 1: தற்போதைய நிலை மற்றும் விழிப்புணர்வு



வாகரை மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள் தொடர்பாக சமூகங்கள் ஆழமான புரிதலைக் கொண்டுள்ளன. குறிப்பிட்ட கைத்தொழில் திட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கும் இடையிலான தொடர்பையும் அவர்கள் அடையாளம் காண்கின்றனர்.

- **நீர்கொழும்பு:** துறைமுக நகரத் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வு, X-Press Pearl அனர்த்தம் மற்றும் நெடுஞ்சாலை நிர்மாணம் ஆகியவை மீன்பிடி குறைவதற்கு காரணமாக அமைந்ததாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். மேலும், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள சுற்றுலா நடவடிக்கைகள் உள்ளூர் சமூகங்களின் மீன்பிடித் தொழிலை நேரடியாகவே பாதித்து வருகின்றன.

- **ரேகவ:** சமூகங்கள் தெளிவான வரலாற்றுக் காலவரிசையை அடையாளம் கண்டுள்ளன. 1980களில் மீன்வளம் அதிகமாக இருந்தது. சுனாமிக்குப் பின்னர் இது பாதிக்கப்பட்டது. பாலங்கள் மற்றும் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னரும், கட்டுப்பாடின்றி முன்னெடுக்கப்பட்ட இறால் பண்ணை நடவடிக்கைகளாலும் மீன்வளம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது.

- **கற்பிட்டி:** 2008ஆம் ஆண்டு முதல் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா நடவடிக்கைகளின் விரிவாக்கத்தால் ஏற்படும் அழுத்தம், வர்த்தக ரீதியான மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மாசுபாடு காரணமாக சிறியளவிலான மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் மேலும் கடலுக்குள் சென்று மீன்பிடிக்க வேண்டிய நிலை, பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் (கடலுக்கடியில் அமைக்கப்படும் மின்சாரக் கம்பிகள்), உயிரியல் பல்வகைமை நிறைந்த ஈரநிலங்களில் குப்பைகள் கொட்டப்படுதல் ஆகியவற்றை பங்கேற்பாளர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், நிலத்தை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இழக்கப்படுவது மற்றும் மின்சார கம்பிகளால் ஏற்படும் வெப்பத்தினால் கடல் சூழலமைப்புக்கு பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்சம் குறித்தும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

- **வாகரை:** காடழிப்பு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் காரணமாக இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கான சமூகங்களின் வாய்ப்புகள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதுடன், அவர்களின் பாரம்பரிய வாழ்வாதார முறைகளுக்கும் வழக்கமான உரிமைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஆதிவாசி தலைவர்கள் தெரிவித்தனர். சுற்றுலா மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளால் கண்டல் தாவரங்களும் கரையோர தாவரங்களும் அழிக்கப்படுவதுடன், மீன்வளத்தை ஆதரிக்கும் மற்றும் கரையோரத்தை பாதுகாக்கும் சூழலமைப்புகள் சீரழிந்து வருவதாகவும் சமூகங்கள் கவலை தெரிவித்தன. அதேவேளை, அழிவை ஏற்படுத்தும் அல்லது அனுமதியற்ற மீன்பிடி முறைகள் உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள், விதிமுறைகள் முறையாக அமுல்படுத்தப்படாத நிலையில் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- **விடத்தல்தீவு:** பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு அருகில் வாழும் சமூகங்கள், வெளியிடங்களை சேர்ந்தவர்கள் மற்றும் அயல் நாடுகளை சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. உரிய விதிமுறைகளோ அல்லது அதிகாரிகளிடமிருந்து போதுமான தகவல்களோ வழங்கப்படாத நிலையில், கண்டல் தாவரங்கள் நிறைந்த பகுதிகளில் இறால் பண்ணைகளை அமைப்பதற்கு அதிகாரிகள் ஆதரவளிப்பதாக சமூகங்கள் தெரிவிக்கின்றன. இதனால், இச்சமூகங்கள் இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுவதுடன், அதற்கு பதிலாக எந்தவொரு மாற்றுத் தீர்வும் வழங்கப்படவில்லை. சேற்றுநண்டு மீன்பிடி தொழில் வீழ்ச்சியடைந்ததற்கு இறால் பண்ணைகளால் ஏற்படும் இரசாயன மாசுபாடே காரணம் என கரையோர மீனவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர்.

- **வடக்கு மன்னார் (கணக்கெடுப்பு):** சுற்றுச்சூழல் சீரழிவு தொடர்பாக பரவலான விழிப்புணர்வு இருப்பதை அளவுசார் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த 5 ஆண்டுகளை விட தற்போது கடல்வாழ் உயிரினங்கள் குறைந்துள்ளன என பதிலளித்தவர்களில் 95 வீதமானோர் தெரிவித்துள்ளனர். இதற்கு சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி மற்றும் கடலட்டை பண்ணைகளின் விரிவாக்கம் ஆகியவை காரணம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொகுதி 2: நிர்வாகத்தில் உள்ள இடைவெளி – ஆலோசனைக்கும் ஒப்புதலுக்கும் இடையிலான வேறுபாடு

நிர்வாகத் தோல்விகளால் மேலும் மோசமடைந்துள்ள அர்த்தமுள்ள பங்கேற்பின்மை என்பது, அனைத்து பகுதிகளிலும் காணப்பட்ட ஒரு பொதுவான விடயமாகும்.

- **"தீர்மானிக்கவும், அறிவிக்கவும், நியாயப்படுத்தவும்":** ரேகவவில், மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டபோது, கடல் அலை தடுப்புச் சுவர் தவறான திசையை நோக்கி அமைக்கப்பட்டதால், அது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மீனவர்கள் இவ்வாறு தெரிவித்தனர் - "அவர்கள் எங்களுடன் பேசவே இல்லை. அவர்கள் சுவரை கட்டிவிட்டார்கள்." என்றனர். விடத்தல்தீவில், பாதுகாக்கப்பட்ட பகுதி தொடர்பாக தமக்கு "போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லை" என சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். உரிய ஆலோசனைகள் எதுவும் இடம்பெறுவதற்கு முன்னரே, விதிமுறைகளை மீறியதாகக் கூறி கிராம மக்களை அதிகாரிகள் கைது செய்ய தொடங்கினர்.

- **நிர்வாக மற்றும் மொழித் தடைகள்:** கற்பிட்டியில், நிர்வாகத்தில் உள்ள இடைவெளியானது, கட்டமைப்பு ரீதியானதாக உள்ளது. கிராம சேவகர்கள் அதிக பணிச்சுமைக்கு உள்ளாகியுள்ளனர் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும் 600 முதல் 800 பேருக்கு சேவையாற்ற வேண்டியுள்ளதால், பல நேரங்களில் அவர்களை சந்திக்க முடியாதுள்ளதாகவும் பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். குறிப்பாக, முக்கியமான தகவல்கள் பெரும்பாலும் சிங்கள மொழியில் மட்டுமே தெரிவிக்கப்படுவதால், தமிழ் பேசும் மக்களுக்கு அது ஒரு நிவர்த்திக்க முடியாத தடையாக உள்ளது. பங்கேற்பாளர்கள் தெரிவித்ததாவது: "சமூகங்களுக்கும் உயர்மட்ட தீர்மானங்களை எடுப்பவர்களுக்கும் இடையிலான தொடர்பாடல் பலவீனமாக இருப்பதாக கருதப்படுகிறது."

- **யுத்தத்தின் பின்னரான இடம்பெயர்வு:** வாகரையில், இந்த இடைவெளியானது இராணுவமயமாக்கப்பட்டதாக உள்ளது. நில உரிமைகள் தொடர்பாக ஆதிவாசி தலைவர்கள் பலமுறை ஜனாதிபதியை சந்தித்த போதிலும், அதன்பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். வனவள மற்றும் தொல்பொருள் திணைக்களங்கள், பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த நிலங்களுக்கு செல்வதை தீவிரமாக தடுத்து வருகின்றன. மேலும், ஒப்புதல் வழங்கும் செயன்முறைகளில் தமது உரிமைகளை பயன்படுத்துவதற்கான சமூகங்களின் திறனும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- **சட்ட அமுலாக்கத்தில் உள்ள வெற்றிடம்:** இரணைதீவில், சட்டவிரோத வெடிமருந்து பயன்படுத்தி மீன்பிடித்தல் மற்றும் வெளிச்சத்தை பயன்படுத்தி மீன்பிடித்தல் ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்கள் என சமூகங்கள் அடையாளம் கண்டுள்ள போதிலும், அவற்றை தடுத்து நிறுத்த தங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என பதிலளித்தவர்களில் 85 வீதமானோர் தெரிவித்துள்ளனர். இதற்கு அரசாங்கத்தின் சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் முற்றிலும் இல்லாமையே காரணம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளதுடன், அரசாங்கம் உடனடியாக தலையிட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

தொகுதி 3: அதிகாரம், தடைகள் மற்றும் நில உரிமை தொடர்பான பாதுகாப்பின்மை

- **சுற்றுலாவும் நில உரிமையும்:** நீர்கொழும்பு மற்றும் கற்பிட்டியில், சுற்றுலா அபிவிருத்தியானது நிலம் மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பை இழப்பதற்கு நேரடியாக பங்களித்துள்ளது. கடந்த காலங்களில் தமது வாழ்வாதாரத்தை ஆதரித்த நிலங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதில் உள்ளூர் சமூகங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

- **நில உரிமை தொடர்பான பாதுகாப்பின்மை ஒரு தடையாக இருப்பது:** வாகரையில், முறையான நில உரிமை பத்திரம் இல்லாத நிலை பயன்படுத்தப்பட்டு வருகிறது. வனப்பகுதிக்கான நிலம் என அரசாங்கம் உரிமை கோருவதன் மூலம், தனியார் வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஆதிவாசி சமூகங்கள் தமது பாரம்பரிய நிலங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

- **புறக்கணிப்பின் அரசியல் பொருளாதாரம்:** ரேகவவில், 30 ஆண்டுகளுக்கான இறால் பண்ணை ஒப்பந்தம் அரசியல் ஆதரவு இருப்பதாக கருதப்பட்ட நிலையில் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஊழல் இடம்பெற்றதாக கருதப்படும் அதிகாரிகளின் ஆதரவுடன், உள்ளூர் விதிமுறைகள் பின்பற்றப்படாமல் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

- **உட்கட்டமைப்பு திட்டங்களால் ஏற்படும் அபாயங்கள்:** கற்பிட்டியில், கடலுக்கடியில் அமைக்கப்படும் மின்சாரக் கம்பி திட்டம் தொடர்பாக பங்கேற்பாளர்கள் கேள்வி எழுப்பினர். இதனால் ஏற்படும் வெப்பம் கடல் வளங்களை பாதிக்கக்கூடும் என்றும், மாற்று வழித்தடங்கள் குறித்து போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர். மக்களின் உயிர்களுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை "அபிவிருத்தி" என கருதக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

- **சட்ட அமுலாக்கத்தில் உள்ள இடைவெளிகள்:** விடத்தல்தீவில், 29,180 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட பாதுகாக்கப்பட்ட பகுதி இரண்டு அதிகாரிகளால் மட்டுமே கண்காணிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி மற்றும் வெடிமருந்து பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறுகின்றன. இவை தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

- **கடலட்டை தொடர்பான முரண்பாடு:** வடக்கு மன்னாரில், சிலருக்கு வருமானத்தை வழங்கும் கடலட்டை வளர்ப்பு, மற்றவர்களின் கடற்புற் படுகைகளை நேரடியாக சேதப்படுத்தும் நிலை காணப்படுகின்றது. கடலட்டை பண்ணைகளில் பணிபுரிபவர்கள் கடற்புற் படுகைகள் மீது நடப்பதும், கூண்டுகளை அங்கு நங்கூரமிடுவதும் இடம்பெறுவதாக பதிலளித்தவர்கள் தெரிவித்தனர். எனினும், இந்த முரண்பாட்டை நிர்வகிப்பதற்கான போதுமான ஒழுங்குமுறை கட்டமைப்பு இல்லாததால், சமூகத்திற்குள்ளேயே பதற்றம் ஏற்படுகின்றது.



ரேகவ மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

தொகுதி 4: சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலை (FPIC) மதிப்பீடு செய்தல் — "உண்மையான ஒப்புதல்" என்பது எப்படி இருக்க வேண்டும்

ஒப்புதல் என்றால் என்ன என்று கேட்டபோது, சமூகங்கள் அதனை நடைமுறை ரீதியாக வரையறுத்தன.:

- **அனைவருக்கும் கிடைக்கக்கூடிய தகவல்கள்:** கற்பிட்டியில், ஒப்புதலை பெறுவதற்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். மேலும், வெளிப்படைத்தன்மையையும் சமூகங்களை திரட்டுவதையும் மேம்படுத்துவதற்காக, மீன்பிடி, பெண்கள் மற்றும் கிராம மட்டக் குழுக்கள் போன்ற நம்பிக்கைக்குரிய உள்ளூர் அமைப்புகள் ஊடாக இந்தத் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சில குழுக்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுப்பதற்கு பதிலாக, "மாவட்டத்தில் உள்ள அனைத்து சங்கங்களும்" ஆலோசனைகளுக்கு அழைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- **தொழில்நுட்ப ரீதியான உறுதிப்படுத்தல்:** திட்டங்களின் வடிவமைப்பில் உள்ளூர் மக்களின் அறிவு கருத்திற்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, ரேகவ பிரதேசத்தில் துறைமுகம் அமைக்கப்படும் திசை, கற்பிட்டியில் மின்சாரக் கம்பிகள் செல்லும் வழித்தடம், வாகரையில் சுற்றுலாவுக்காக கண்டல் தாவரங்கள் அகற்றப்படுவது, விடத்தல்தீவில் சமூகங்களின் நிலங்கள் மற்றும் நீர்நிலைகளை பாதிக்கும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை பிரகடனப்படுத்துதல் மற்றும் அவற்றை நிர்வகித்தல் போன்ற விடயங்களில் உள்ளூர் மக்களின் அறிவு பயன்படுத்தப்பட வேண்டும். தீர்மானங்கள் மாற்ற முடியாத நிலையை அடைவதற்கு முன்னர், அவர்களின் அறிவு சுயாதீனமான தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான மதிப்பீடுகளுக்கு துணையாக இருக்க வேண்டும்.
- **மறுக்கும் உரிமை:** மக்களுக்கோ சுற்றுச்சூழலுக்கோ ஏற்றுக்கொள்ள முடியாத அபாயங்களை ஏற்படுத்தும் உட்கட்டமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படக்கூடாது என சமூகங்கள் வலியுறுத்துகின்றன. ரேகவவில், முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இறால் பண்ணைக்கு சமூகத்தினர் ஒப்புதல் வழங்கினர். ஆனால், அந்த நிபந்தனைகள் மீறப்பட்டபோது, அந்த ஒப்புதலை மீளப் பெறுவதற்கான உரிமை சமூகத்தினருக்கு இருப்பது கருத்திற்கொள்ளப்படவில்லை.
- **இணை நிர்வாகமும் சட்ட அமுலாக்கமும்:** ஒப்புதல் என்பது நடைமுறை நடவடிக்கைகளுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். வடக்கு மன்னாரில் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 65 வீதமானோர், சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காக அரசாங்கத்துடன் இணைந்து சமூகங்களும் செயற்படும் "இணை நிர்வாக" முறைகளை கோரியுள்ளனர். அதாவது, அரசாங்கம் விதிகளை உருவாக்கி அவற்றை சமூகங்கள் பின்பற்ற வேண்டும் என்பதற்கு பதிலாக, இயற்கை வளங்களை நிர்வகிப்பதிலும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பதிலும் சமூகங்களும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.



ரேகவ மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

தொகுதி 5: தீர்வுகள் மற்றும் சமூக பொறுப்புணர்வுடன் வளங்களை பாதுகாத்தல்

"அழிப்பவர்கள்" என சமூகங்களை சித்தரிக்கப்படும் பொதுவான கருத்துக்கு மாறாக, அவர்கள் நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளை முன்வைத்து, வளங்களை பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபடக்கூடியவர்களாக இருப்பதை, ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் வெளிப்படுத்துகின்றன.

- **கற்பிட்டி:** வர்த்தக மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளால் ஏற்படும் அழுத்தங்களிலிருந்து பாரம்பரிய மீனவர்களை பாதுகாக்கும் வகையில், ஒருங்கிணைந்த மீன்பிடிக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என பங்கேற்பாளர்கள் கோரினர். கற்பிட்டி மீனவர்கள், பெண்களால் நிர்வகிக்கப்படும் மீன்பிடி வலைகளை மீள்சுழற்சி செய்யும் திட்டங்கள், இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதை குறைப்பதற்காக பாரம்பரிய விவசாயத்திற்கான நிலப் பயன்பாட்டு வாய்ப்பை மீள வழங்குதல் ஆகியவற்றையும் முன்மொழிகின்றனர்.
- **நீர்கொழும்பு:** மீனவப் பெண்களின் குழுக்கள் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து, அவற்றை மீள்சுழற்சிக்கு அனுப்பும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.
- **ரேகவ:** இச்சமூகத்தினர் ஆமைகள் முட்டையிடும் பகுதிகளை தீவிரமாக பாதுகாத்து வருவதுடன், இறால் பண்ணை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.
- **வாகரை:** காடுகளை சடங்கு முறைகளின் மூலம் பாதுகாத்தல் மற்றும் இயற்கையான முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பாரம்பரிய நடைமுறைகள் இங்கு காணப்படுகின்றன.
- **விடத்தல்தீவு:** இணை நிர்வாகத்தில் ஈடுபடுவதற்கு தாம் மிகவும் ஆர்வமாக இருப்பதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். எனினும், கண்காணிப்பு மற்றும் சட்ட அமுலாக்க நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் ஆதரவு அவசியம் என அவர்கள் வலியுறுத்தினர். மீன்வளம் மீண்டும் பெருகி அதிகரிப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், கண்டல் தாவரங்கள் காணப்படும் கரையோரத்திலிருந்து கடலை நோக்கி 100 மீற்றர் கரையோர பகுதியில் மீன்பிடித்தல் மற்றும் வளங்களை அறுவடை செய்தல் ஆகியவற்றை தாமாக முன்வந்து தவிர்த்து, உள்ளூர் மீனவர்கள் தமது சொந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்கி வருகின்றனர்.
- **வடக்கு மன்னார் (வெள்ளாங்குளம் முதல் பூநகரி வரையான பகுதி, இரணைதீவு உட்பட):** சுற்றுச்சூழல் அழிவு காணப்பட்ட போதிலும், ஆதரவு வழங்கப்பட்டால் கடற்புற் படுகைகளை பாதுகாக்க தயாராக இருப்பதாக 92 வீதமான பதிலளித்தவர்கள் தெரிவித்துள்ளனர். கடற்புற் படுகைகளை அவர்கள் வெறுமனே உயிரினங்களின் வாழிடமாக மட்டும் கருதவில்லை. கடலட்டைகள் வளர்வதற்கான "குளிர்ச்சியான சூழல்" எனவும் அவர்கள் கருதுகின்றனர். இது சூழலமைப்பு வழங்கும் சேவைகள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள நுட்பமான புரிதலை வெளிப்படுத்துகின்றது.
- **அறிவை ஒருங்கிணைத்தல்:** அனைத்து பகுதிகளிலும், விஞ்ஞான அறிவும் சமூகங்களின் அறிவும் ஒன்றுக்கொன்று எதிரான அணுகுமுறைகளாக இருக்கக்கூடாது என பங்கேற்பாளர்கள் வலியுறுத்தினர். கற்பிட்டியில், நீரோட்ட முறைகள் குறித்த தமது புரிதலை கருத்திற்கொள்வதன் மூலம், முறையாக திட்டமிடப்படாத கட்டமைப்புகளால் ஏற்படும் வெள்ளத்தை தடுக்க முடியும் என உள்ளூர் மக்கள் குறிப்பிட்டனர்.

தொகுதி 6: காலநிலை பொறுப்புக்கூறல் மற்றும் இழப்பு, சேதம

- **மாறிவரும் காலநிலை நிலைமைகள்:** கற்பிட்டியில், நிலத்தடி நீரில் உவர்த்தன்மை அதிகரித்துள்ளதுடன், தாவரங்கள் கறுப்பாகி வருவதாகவும் பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். வடக்கு மன்னாரில், "அதிக வெப்பநிலை" மற்றும் "நன்னீர் வெள்ளப்பெருக்கின் வரத்து" ஆகியவை கடற்புற் படுகைகள் சேதமடைவதற்கு நேரடியாக காரணமாக இருப்பதாக பதிலளித்தவர்கள் தெரிவித்தனர். வாகரையில், காற்றின் போக்கில் ஏற்பட்ட மாற்றம், மழை, அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் சூழலமைப்புகளின் இழப்பு ஆகியவையும் பதிவாகியுள்ளன.
- **டிட்வா சூறாவளி:** நீர்கொழும்பில், நன்னீர் வரத்து பாதிக்கப்பட்டதால் சூழலமைப்புகள் சேதமடைந்ததுடன், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. வாகரையில், அழிந்த மீன்பிடி வலைகள் மற்றும் பயிர்களுக்கு நிதி இழப்பீடு வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த இழப்பீடு ஒருபோதும் கிடைக்கவில்லை.
- **பொருளாதாரம் சாராத இழப்பு:** சமூகங்கள் தமது வாழ்வாதாரங்களையும் பொருள் சார்ந்த சொத்துக்களையும் மட்டும் இழக்கவில்லை. சுற்றுச்சூழல் மாற்றங்களை முன்கூட்டியே புரிந்துகொள்ளும் திறன், அறிவு மற்றும் தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு வந்த கலாசார நடைமுறைகளையும் அவர்கள் இழந்து வருகின்றனர். சமூக உறுப்பினர் ஒருவர் இதனை இவ்வாறு விவரித்தார்: "முந்தைய தலைமுறையினரால் எமக்கு கற்றுத்தரப்பட்ட சுற்றுச்சூழல் காலவரிசை, இன்றைய காலநிலை நிலைமைகளுடன் இனிமேலும் பொருந்தவில்லை." மழைப்பொழிவு, பருவகாலங்கள், மீன்களின் இடப்பெயர்வு, கரையோர சூழலமைப்புகள் மற்றும் நீர் கிடைக்கும் தன்மை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பாரம்பரிய அறிவையும் வாழ்க்கை முறைகளையும் பாதித்து வருகின்றன. சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உடல்நலம் மற்றும் நல்வாழ்வு மீதான பாதிப்புகளும் இருப்பதாக சமூகங்கள் தெரிவித்துள்ளன. இந்த இழப்புகளை வெறுமனே நிதி இழப்பீட்டின் மூலம் அளவிட முடியாததால், அவை பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. சுற்றுச்சூழல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதிலும் உயிரியல் பல்வகைமை நிர்வாகத்திலும் உள்ளூர் மற்றும் பழங்குடியின அறிவு, அர்த்தமுள்ள பங்கேற்பு மற்றும் சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) ஆகியவை கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை இந்த இழப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

கரையோர சமூகங்கள் அபிவிருத்தி அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள் என சித்தரிப்பதற்கு, இந்த ஆய்வின் கண்டறியப்பட்ட விடயங்கள் ஆதரவளிக்கவில்லை என்பதை குறிப்பிடுவது அவசியம். மாறாக, வீதிகள், பாலங்கள், சுற்றுலா, கடலுயிரின வளர்ப்பு, பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை முறையாக வடிவமைக்கப்பட்டு, சுற்றுச்சூழல் ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டு, வாழ்வாதாரங்களுடன் இணக்கமாகவும், ஆரம்ப கட்டத்திலேயே பிரதிநிதித்துவம் கொண்ட பங்கேற்புடன் உருவாக்கப்பட்டதாகவும் இருந்தால், அவற்றுக்கு நிபந்தனையுடன் ஆதரவளிப்பதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். நிர்வாகத்தில் ஏற்படும் தோல்விகளுக்கு, சமூகங்களின் அதிகாரமும் சூழலியல் பாதுகாப்பில் அவர்களின் பங்களிப்பும் தடைகளாக அன்றி, சாத்தியமான தீர்வுகளாக அமையக்கூடும் என அனைத்து பகுதிகளிலும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.



இரணைதீவு மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

4. “ஒப்புதல் தொடர்பான இடைவெளி”



நீர்கொழும்பு மீனவ சமூகத்தினர், ஜூன் 2026 **(©Greenpeace)**

அனைத்து பகுதிகளிலும், ஒப்புதல் மற்றும் நிர்வாகம் தொடர்பான இடைவெளி தொடர்ந்து காணப்படுவதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். பாதுகாக்கப்பட்ட பகுதிகள், உட்கட்டமைப்புகளுக்கான வழித்தடங்கள் அல்லது நிலப் பயன்பாடு தொடர்பான ஏற்பாடுகள் குறித்து தீர்மானங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட பின்னரே செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் சமூகங்களுக்கு பெரும்பாலும் தெரிவிக்கப்படுகின்றன. மீன்பிடி பகுதிகள், நீரோட்டங்கள், இனப்பெருக்க சுழற்சிகள், வானிலை, கண்டல் தாவரங்கள், காடுகள் மற்றும் பாரம்பரிய வள நிர்வாகம் தொடர்பான தமது அறிவு, திட்டமிடலில் முறையாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். சமூகங்கள் தமது எதிர்ப்புகளை தெரிவிக்கும் சந்தர்ப்பங்களில், அவர்களின் கரிசனைகள் பதிவு செய்யப்படுவதில்லை, அவற்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை அல்லது அதற்கான தெளிவான விளக்கம் வழங்கப்படுவதில்லை என அவர்கள் கருதுகின்றனர்.

“அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பின்னரே அவை குறித்து எமக்கு தெரியவருகிறது.” (இலக்குக் குழு கலந்துரையாடல் பங்கேற்பாளர், புத்தளம் மாவட்டம்)

குறிப்பிட்ட அழுத்தங்கள் ஒவ்வொரு பகுதியிலும் வேறுபடுகின்றன. நீர்கொழும்பில் நகரமயமாக்கல் மற்றும் மாசுபாடு முதல், வடக்கு மற்றும் கிழக்கில் சுற்றுலா, கடலுயிரின வளர்ப்பு, பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் யுத்தத்தின் பின்னரான நில உரிமை தொடர்பான பாதுகாப்பின்மை வரை இவை காணப்படுகின்றன. எனினும், நிர்வாக நடைமுறையில் காணப்படும் போக்கு ஒரே மாதிரியாக உள்ளது. தீர்மானங்கள் பெருமளவில் எடுக்கப்பட்ட பின்னரே பாதிக்கப்படும் சமூகங்களுக்கு அவை தெரிவிக்கப்படுவதாகவும், உள்ளூர் மக்களின் சூழலியல் அறிவுக்கும் வாழ்வாதாரங்கள் மீதான தாக்கங்களுக்கும் குறைந்தளவே முக்கியத்துவம் வழங்கப்படுவதாகவும் சமூகங்கள் தெரிவிக்கின்றன. இதன் விளைவாக, இது உரிமைகள் தொடர்பான பிரச்சினையாக மட்டுமன்றி, நடைமுறை ரீதியான நிர்வாகத் தோல்வியாகவும் உள்ளது. இதனால் முறையாக வடிவமைக்கப்படாத உட்கட்டமைப்புகள் உருவாகுதல், அணுகல் தொடர்பான தீர்க்கப்படாத முரண்பாடுகள், விதிமுறைகளை பின்பற்றச் செய்வதில் பலவீனம் மற்றும் நம்பிக்கை குறைதல் போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அதேவேளை, சமூகங்கள் அபிவிருத்தி அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒரே மாதிரியாக எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. மாறாக, ஒழுங்குபடுத்தப்பட்ட அபிவிருத்தி, சமூகங்களின் கண்காணிப்பு, இணை நிர்வாகம், இருமொழித் தகவல் பரிமாற்றம், வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் வலுவான சட்ட அமுலாக்கம் ஆகியவற்றை சமூகங்கள் அடிமட்டத்தில் இருந்து முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளாக முன்மொழிகின்றன.

கரையோர சமூகங்களிடையே காணப்படும் “ஒப்புதல் தொடர்பான இடைவெளி”

இலங்கையின் கரையோர மற்றும் நீரேரிகளை சார்ந்து வாழும் சமூகங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பீட்டுத் தரவுகள்

இடம்	மாகாணம்/ பிராந்தியம்	முக்கிய அச்சுறுத்தல் அல்லது அழுத்தம்	நிர்வாகத் தோல்வி	நில உரிமை மற்றும் பயன்பாட்டுக்கான அழுத்தம்	சமூகத்தின் நடவடிக்கை மற்றும் முன்மொழியப்பட்ட தீர்வு
நீர்கொழும்பு	மேல் மாகாணம்	நகரமயமாக்கல், துறைமுக நகரம் தொடர்பான அபிவிருத்தி, சுற்றுலா, மாசுபாடு, மீன்களை உலர்த்துவதற்கான இடங்கள் மற்றும் நீரேரிப் பகுதிகள குறைந்து வருதல், X-Press Pearl அனர்த்தத்தின் தாக்கங்கள்	சமூகங்களின் எதிர்ப்புகள் அர்த்தமுள்ள பங்கேற்பாக கருதப்படாமல், தகவல் தெரிவித்தலாக மட்டுமே கருதப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அபிவிருத்த மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் தொடர்பான கரிசனைகள் போதுமான அளவில் கருத்திற்கொள்ளப்படவில்லை.	நீரேரி, கரையோரம் மற்றும் மீன்களை உலர்த்தும் பகுதிகள் முறையான ஆவணங்களின்றி அல்லது வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்ப ட்டு வரும் நிலையில், நகர மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியால் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன.	கழிவு முகாமைத்துவம் மற்றும் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள், மனுக்கள், சட்ட நடவடிக்கைகள், சமூக விழிப்புணர்வு மற்றும் அடிமட்டத்தில் இருந்து தீர்மானங்களை எடுக்கும் நடைமுறைகள். கடற்புற் படுகைகள் மற்றும் பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்கான நீண்டகால செயற்திட்டம்.
ரேகவ	தென் மாகாணம்	சுற்றுலா, இறால் பண்ணைகள், மாசுபாடு மற்றும் முறையாக வடிவமைக்கப்படாத துறைமுகம் மற்றும் பாலம் தொடர்பான உட்கட்டமைப்புகள்	துறைமுகம் மற்றும் உட்கட்டமைப்பு வடிவமைப்பில் தொழில்நுட்ப ரீதியான கரிசனைகள் கருத்திற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. கடலுயிரின வளர்ப்பு தொடர்பான தீர்மானங்களில் பலவீனமான ஒழுங்குமுறை மற்றும் அரசியல் செல்வாக்கு குறித்தும் பங்கேற்பாளர்கள் கரிசனை தெரிவித்தனர்.	ஈரநிலங்கள், நீரேரிகள், கண்டல் தாவரப் பகுதிகள் மற்றும் மீன்பிடிக்கான அணுகல் ஆகியவை சுற்றுலா மற்றும் கடலுயிரின வளர்ப்பு தொடர்பான நிலப் பயன்பாட்டு தீர்மானங்களால் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன.	இறால் பண்ணைகள் தொடர்பான போராட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள், ஆமைகள் மற்றும் கண்டல் தாவரங்களைப் பாதுகாத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கட்டுப்பாடற்ற அபிவிருத்திக்கு பதிலாக ஒழுங்குபடுத்தப்பட்ட அபிவிருத்திக்கு ஆதரவளித்தல்.
வாகரை	கிழக்கு மாகாணம்	காடழிப்பு, நில அபகரிப்பு, வனப்பகுதிகளுக்கான அணுகல் கட்டுப்பாடு, யுத்தத்தின் பின்னரான இடம்பெயர்வு மற்றும் இராணுவமயமாக்கல்	அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்ட போதிலும், அதன்பின்னர் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. பாரம்பரிய நிலம் மற்றும் வனப்பகுதிகளைப் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், சமூகங்களின் அறிவும் போதுமான அளவில் அங்கீகரிக்கப்படவில்லை.	மூதாதையர்களிடமிருந்து வந்த மற்றும் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலம் மற்றும் வனப்பகுதிகள் தொடர்பான உரிமைகள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. முறையான நில உரிமைப் பத்திரங்கள் இல்லாததால், அரசாங்கத்தின் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் தனியார் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளால் சமூகங்கள் மேலும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர்.	உயர்மட்ட அதிகாரிகளிடம் நேரடியாக கோரிக்கைகளை முன்வைத்தல், பாரம்பரிய நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்த்தல், பாரம்பரிய சூழலியல் பாதுகாப்பு, பாரம்பரிய பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் சமூகங்களின் கட்டுப்பாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள்.
கற்பிட்டி	வடமேல் மாகாணம	சுற்றுலா விரிவாக்கம், வர்த்தக மற்றும் சட்டவிரோத மீன்பிடி, மாசுபாடு மற்றும் முன்மொழியப்பட்டுள்ள கடலுக்கடியில் அமைக்கப்படும் மின்சாரக் கம்பி உட்கட்டமைப்பு	சிங்கள மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட தகவல் பரிமாற்றம், உள்ளூர் நிர்வாகத்தின் அதிக பணிச்சுமை, உயர்மட்ட அதிகாரிகளுடன் பலவீனமான தொடர்பாடல் மற்றும் வழித்தடங்கள் மற்றும் செயற்திட்டங்களின் தாக்கங்கள் தொடர்பான போதிய ஆலோசனை இல்லாமை.	சுற்றுலா தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக நிலம், இயற்கை வளங்கள் மற்றும் பாரம்பரிய வாழ்வாதாரப் பகுதிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.	இருமொழித் தகவல்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, மீன்பிடி, பெண்கள் மற்றும் கிராம சங்கங்களைப் பயன்படுத்துதல், வலுவான மீன்பிடிக் கொள்கை, உள்ளூர் அறிவை ஒருங்கிணைத்தல் மற்றும் வழித்தடங்கள் தொடர்பான அர்த்தமுள்ள ஆலோசனைகள். சமூகங்களால் முன்னெடுக்கப்படும் சுற்றுலாவை ஊக்குவித்தல்.
விடத்தல்தீவு	வட மாகாணம்	பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான கட்டுப்பாடுகள், சட்டவிரோத மீன்பிடி, இறால் பண்ணைகளால் ஏற்படும் தாக்கங்கள், மீன்வளம் குறைதல் மற்றும் கரையோர சூழலமைப்புகளின் சீரழிவு	பாதுகாக்கப்பட்ட பகுதியை பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் போதுமான தகவல்கள் அல்லது அர்த்தமுள்ள ஆலோசனைகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. ஒன்றோடொன்று முரண்படும் எல்லைகள், தெளிவற்ற பொறுப்புகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சட்ட அமுலாக்கம் ஆகியவை இந்த நிர்வாக முறையின் ஏற்றுக்கொள்ளப்படுதலை பாதிக்கின்றன.	வரலாற்று ரீதியாக பயன்படுத்தப்பட்ட கடல் பகுதிகளுக்கான அணுகலும் பாரம்பரிய கடல் வளப் பயன்பாடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன. அழிவை ஏற்படுத்தும் மீன்பிடி நடவடிக்கைகள தொடர்ந்து இடம்பெறும் நிலையில், விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும் கைது நடவடிக்கைகளும் நியாயமற்றவை என சமூகங்கள் கருதுகின்றன.	பாதுகாக்கப்பட்ட பகுதியை இணைந்து நிர்வகிக்கத் தயாராக உள்ளனர். சமூகங்களின் கண்காணிப்பு, தெளிவான எல்லைகள், வலுவான சட்ட அமுலாக்கம், மாற்று வாழ்வாதாரங்கள், சேதமடைந்த மீன்பிடி வலைகளை மீள வழங்கும் முறை மற்றும் பெண்களால் முன்னெடுக்கப்படும் வலை பழுதுபார்ப்பு ஆகியவை முன்மொழியப்பட்டுள்ளன.
வடக்கு மன்னார் (வெள்ளா-ங்குளம் முதல் பூநகரி வரையான பகுதி, இரணைதீவு உட்பட)	வட மாகாணம்	சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி போன்ற அழிவை ஏற்படுத்தும் மீன்பிடி நடவடிக்கைகள், கடலட்டை மற்றும் கடற்பாசி சார்ந்த வாழ்வாதாரங்களுக்கு ஏற்படும் அழுத்தங்கள், கடற்புற் படுகைகள் குறைதல் மற்றும் காலநிலை அபாயங்கள்	சட்ட அமுலாக்கம் பலவீனமாக இருப்பதுடன், ஒன்றுக்கொன்று போட்டியாக உள்ள வளப் பயன்பாடுகளை நிர்வகிப்பதில் போதுமான ஒருங்கிணைப்பு இல்லை. பாதுகாக்கப்பட்ட கடல் பகுதிகளின் வலயப் பிரிவுகளை தீர்மானிப்பதில் சமூகங்களின் அறிவும் இணை நிர்வாகம் தொடர்பான அவர்களின் கருத்துக்களும் இடம்பெற வேண்டும்.	மீன்பிடி, கடலுயிரின வளர்ப்பு மற்றும் கடற்புற் படுகை வளங்களின் பயன்பாடு ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளன. யுத்தத்தின் பின்னரான இடம்பெயர்வு, நில உரிமைப் பத்திரங்கள் தொடர்பான பாதுகாப்பின்மை, இராணுவத்தால் பயன்படுத்தப்படும் நிலங்கள் மற்றும் அணுகல் கட்டுப்பாடுகள் ஆகியவை சமூகங்களின் பாதிப்புக்குள்ளாகும் நிலையை அதிகரிக்கின்றன.	சமூகப் பங்கேற்பு மற்றும் இணை நிர்வாகத்திற்கான வலுவான கோரிக்கை, குறிப்பிட்ட வாழ்வாதாரங்களைப் பல்வகைப்படுத்துதல், அனர்த்தங்களுக்கான தயார்நிலை, படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக சேமித்தல், முன்கூட்டிய எச்சரிக்கைகள் மற்றும் கடற்புற் படுகைகளைப் பாதுகாப்பதற்கான ஆதரவு.

இந்த அட்டவணை பங்கேற்பாளர்களின் அனுபவங்கள், கருத்துக்கள் மற்றும் அவர்கள் முன்மொழிந்த தீர்வுகளை சுருக்கமாக முன்வைக்கின்றது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஆறு பகுதிகளிலும், ஒப்புதல் தொடர்பான இடைவெளி தொடர்ந்து காணப்படுவதாக சமூகங்கள் தெரிவித்தன. கரையோர நிலங்கள், நீர்நிலைகள், வாழ்வாதாரங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை பாதிக்கும் தீர்மானங்கள், பெரும்பாலும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பின்னரே சமூகங்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. அதேவேளை, உள்ளூர் மக்களின் சூழலியல் அறிவுக்கும் வாழ்வாதாரங்கள் மீதான தாக்கங்களுக்கும் குறைந்தளவே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

5. சட்டம் மற்றும் கொள்கை தொடர்பான ஆய்வு: கட்டமைப்பு ரீதியான தடை

களை ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் தனித்தனியாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. அவை சமூகங்களின் உரிமைகளை உள்ளடக்காத சட்டக் கட்டமைப்பின் வெளிப்பாடுகளாகும்.

2026ஆம் ஆண்டின் 15.ஃ.2026ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (திருத்தச்) சட்டம், மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீட்டை (SEA) அறிமுகப்படுத்துவதுடன், அதிகளவிலான தண்டனைகளையும் அறிமுகப்படுத்துகின்றது. எனினும், இதில் முக்கியமான குறைபாடுகள் காணப்படுவதை சிவில் சமூகத்தின் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன[3]:

1. **கட்டாயமான FPIC இல்லை:** இந்த சட்டமூலம் "பொதுமக்களின் கருத்துக்களை" கோருகின்றதே தவிர, ஒப்புதல் பெறுவதை கட்டாயமாக்கவில்லை. பிரிவு 23KK(6)இன் கீழ், அதிகாரிகள் கருத்துக்களை "கருத்திற்கொள்ள வேண்டும்" என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இது சமூகங்களின் கரிசனைகளை நிராகரிப்பதற்கு இடமளிக்கும் பலவீனமான நடைமுறையாகும்.
2. **மொழி மற்றும் தகவல்களை பெறுவதற்கான வாய்ப்பு:** அறிவித்தலுக்காக பத்திரிகைகளில் வெளியிடப்படுவதை இந்த சட்டமூலம் நம்பியுள்ளது. கற்பிட்டியில் காணப்பட்டதை போல, இது தமிழ் பேசும் சமூகங்களுக்கு போதுமானதாக இல்லை. மேலும், பிரதான ஊடகங்களை அணுக முடியாதவர்களும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
3. **ஈரநிலங்களை பிரகடனப்படுத்துதல் (பிரிவு 23MM):** முன்கூட்டிய ஆலோசனைகள் எதுவுமின்றி ஈரநிலங்களை பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே அங்கு இடம்பெற்று வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் குற்றச் செயல்களாக கருதப்படும் அபாயம் உள்ளது.
4. **நீதிமன்றத்தை அணுகுவதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுதல் (பிரிவு 23FA(3)):** சில உரிமம் வழங்கும் தீர்மானங்கள் "இறுதியானவை மற்றும் தீர்க்கமானவை என இந்தப் பிரிவு குறிப்பிடுவதன் மூலம், பாதிக்கப்பட்ட சமூகங்கள் நீதியை நாடுவதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுகிறது.
5. **ஒரே மாதிரியான அணுகுமுறை:** இந்தச் சட்டம் "பாதிக்கப்படும் சமூகங்கள்" என்பதற்கு வரையறை

ள ஆய்வில் கண்டறியப்பட்ட விடயங்கள் தனித்தனியாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. அவை சமூகங்களின் உரிமைகளை உள்ளடக்காத சட்டக் கட்டமைப்பின் வெளிப்பாடுகளாகும்.

2026ஆம் ஆண்டின் 15.ஃ.2026ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் (திருத்தச்) சட்டம், மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீட்டை (SEA) அறிமுகப்படுத்துவதுடன், அதிகளவிலான தண்டனைகளையும் அறிமுகப்படுத்துகின்றது. எனினும், இதில் முக்கியமான குறைபாடுகள் காணப்படுவதை சிவில் சமூகத்தின் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன[3]:

1. **கட்டாயமான FPIC இல்லை:** இந்த சட்டமூலம் "பொதுமக்களின் கருத்துக்களை" கோருகின்றதே தவிர, ஒப்புதல் பெறுவதை கட்டாயமாக்கவில்லை. பிரிவு 23KK(6)இன் கீழ், அதிகாரிகள் கருத்துக்களை "கருத்திற்கொள்ள வேண்டும்" என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இது சமூகங்களின் கரிசனைகளை நிராகரிப்பதற்கு இடமளிக்கும் பலவீனமான நடைமுறையாகும்.
2. **மொழி மற்றும் தகவல்களை பெறுவதற்கான வாய்ப்பு:** அறிவித்தலுக்காக பத்திரிகைகளில் வெளியிடப்படுவதை இந்த சட்டமூலம் நம்பியுள்ளது. கற்பிட்டியில் காணப்பட்டதை போல, இது தமிழ் பேசும் சமூகங்களுக்கு போதுமானதாக இல்லை. மேலும், பிரதான ஊடகங்களை அணுக முடியாதவர்களும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.
3. **ஈரநிலங்களை பிரகடனப்படுத்துதல் (பிரிவு 23MM):** முன்கூட்டிய ஆலோசனைகள் எதுவுமின்றி ஈரநிலங்களை பிரகடனப்படுத்த அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே அங்கு இடம்பெற்று வரும் வாழ்வாதார நடவடிக்கைகள் குற்றச் செயல்களாக கருதப்படும் அபாயம் உள்ளது.
4. **நீதிமன்றத்தை அணுகுவதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுதல் (பிரிவு 23FA(3)):** சில உரிமம் வழங்கும் தீர்மானங்கள் "இறுதியானவை மற்றும் தீர்க்கமானவை என இந்தப் பிரிவு குறிப்பிடுவதன் மூலம், பாதிக்கப்பட்ட சமூகங்கள் நீதியை நாடுவதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுகிறது.
5. **ஒரே மாதிரியான அணுகுமுறை:** இந்தச் சட்டம் "பாதிக்கப்படும் சமூகங்கள்" என்பதற்கு வரையறை

வழங்காமல், அதற்கு பதிலாக "பொதுமக்களில் எந்தவொரு உறுப்பினரும்" என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறது. மேலும், நடவடிக்கைகளின் அளவை பொருட்படுத்தாமல் தண்டனைகள் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் தொழில்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களும், வாழ்வாதாரத்திற்காக சிறிய அளவில் இயற்கை வளங்களை பயன்படுத்தும் தனிநபர்களும் ஒரே விதமாக நடத்தப்படும் நிலை ஏற்படுகிறது.

இதற்கு தீர்வாக, சமூகங்களின் நிலங்கள், நீர்நிலைகள், வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை பாதிக்கும் தீர்மானங்களுக்கு, அனைவருக்கும் கிடைக்கக்கூடிய தகவல்கள், அர்த்தமுள்ள பிரதிநிதித்துவம், நீதியை நாடுவதற்கான வாய்ப்பு மற்றும் உரிய ஒப்புதல் தொடர்பான தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தெளிவான உரிமைகள் அடிப்படையிலான பங்கேற்பு தரநிலையின் அடிப்படையில் இந்த சட்டம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சர்வதேச கடப்பாடுகள் தொடர்பாக, இலங்கையின் தற்போதைய அணுகுமுறை பின்வருவனவற்றுடன் முரண்படுகின்றது:

- **ஐக்கிய நாடுகள் சபையின் பழங்குடியின மக்களின் உரிமைகள் தொடர்பான பிரகடனம் (கட்டுரை 19)[4]:** பழங்குடியின மக்களை பாதிக்கும் சட்டமியற்றல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (FPIC) பெறப்பட வேண்டும் என இது வலியுறுத்துகிறது.
- உயிரியல் பல்வகைமை தொடர்பான உடன்படிக்கையின் (CBD) கீழான குன்மிங்-மொன்ரியல் உலகளாவிய உயிரியல் பல்வகைமை கட்டமைப்பின் (KMGBF) இலக்கு 22ஐ5ஸ: முழுமையான, சமத்துவமான, அனைவரையும் உள்ளடக்கிய பங்கேற்பை இது கட்டாயப்படுத்துகிறது: "உயிரியல் பல்வகைமை தொடர்பான தீர்மானங்களை எடுப்பதிலும், அது தொடர்பான நீதியை நாடுவதற்கான வாய்ப்பு மற்றும் தகவல்களைப் பெறுவதிலும், பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் முழுமையான, சமத்துவமான, உள்ளடக்கிய, (பந்தி 374).
    - கட்டாயமான பங்கேற்பு: காலநிலை தொடர்பான நடவடிக்கைகள் "பங்கேற்பு மற்றும் அதிகாரமளித்தல், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நாடுவதற்கான வாய்ப்பு" ஆகிய மனித உரிமை கொள்கைகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது (பந்தி 383).
    - சட்டக் கடப்பாடுகளுக்கு இடையிலான தொடர்பு: "சுற்றுச்சூழல் தொடர்பான உடன்படிக்கைகளின் கீழ் தமது கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தும்போது, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழான தமது கடப்பாடுகளையும் அரசுகள் கருத்திற்கொள்ள வேண்டும்" என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது (பந்தி 404)

இலங்கை மீதான தாக்கம்: சமூகங்களின் ஒப்புதலை பெறத் தவறுவதும், தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் உள்ளூர் சமூகங்களை விலக்குவதும், பாரிஸ் உடன்படிக்கை மற்றும் சர்வதேச வழக்காற்று சட்டத்தின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ள இந்த கடப்பாடுகளை இலங்கை நேரடியாக மீறும் நிலையை ஏற்படுத்துகின்றது.

6. உலகளாவிய வெற்றிக் கதைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள்: சமூகங்கள் முன்னெடுக்கும் நிர்வாகத்தின் சக்தி

பயனுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சமூகங்களின் தலைமைத்துவம் அவசியம் என்பதை அங்கீகரித்துள்ள நாடு இலங்கை மாத்திரமல்ல. உலகின் பல பகுதிகளில், மேலிருந்து கீழ் நோக்கிய கட்டுப்பாட்டிலிருந்து சமூகங்கள் முன்னெடுக்கும் அல்லது சமூகங்களும் அரச நிறுவனங்களும் இணைந்து நிர்வகிக்கும் நிர்வாக முறைக்கு மாறியதன் மூலம், உயிரியல் பல்வகைமை மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகிய இரண்டிலும் சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன. சமூகங்களுக்கு தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும், தமது நிலங்களை பயன்படுத்துவதற்கான உறுதியான உரிமைகளும் வழங்கப்படும் போது, பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையானதாகவும், சமத்துவமானதாகவும், மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடியதாகவும் அமையும் என்பதை இந்த மாதிரிகள் நிரூபிக்கின்றன.

மடகஸ்கரில், சில கரையோர சமூகங்கள் தமது சொந்த உள்ளூர் நிர்வாகத்தின் கீழான கடல் பகுதிகளை (LMMAs) உருவாக்கி, அவற்றை நிர்வகித்து வருகின்றன. வெலோனட்ரியாக் போன்ற பகுதிகளில், இந்த அணுகுமுறையின் மூலம் குறிப்பிட்ட காலத்திற்கு கணவாய் மீன்பிடி பகுதிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கணவாய் வளம் உடனடியாக மீண்டும் அதிகரித்ததுடன், மீனவர்களின் வருமானமும் உயர்ந்தது.[7] முக்கியமாக, பெண்கள் மற்றும் இளைஞர்களையும் உள்ளடக்கிய உள்ளூர் குழுக்களால் இந்த நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படுகின்றன. இதனால் கிடைக்கும் நன்மைகள் அனைவருக்கும் சமமாக பகிரப்படுவதை உறுதி செய்ய முடிகின்றது. இந்த மாதிரி மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளதால், "30X30" இலக்குகளை அடைவதற்கான முக்கிய மூலோபாயமாக ஆபிரிக்கா மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளின் அரசாங்கங்களால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸிலும் இதேபோன்ற வெற்றியை காண முடிகின்றது. சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட கடல் பாதுகாப்பு பகுதிகள், பவளப்பாறைகளின் அழிவை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், உள்ளூர் மீனவர் அமைப்புகளால் நிர்வகிக்கப்படும், மீன்பிடிக்கு தடை செய்யப்பட்ட பகுதிகளில் மீன்களின் உயிர்த்தொகையை 50 வீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளன.[8]

சென்கலில், சமூகங்களும் அரசாங்கமும் இணைந்து நிர்வகிக்கும் பாதுகாக்கப்பட்ட கடல் பகுதிகள், கண்டல் தாவர சூழலமைப்புகளையும் மீன்வளத்தையும் மீட்டெடுத்துள்ளதுடன், பெண்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளையும் வழங்கியுள்ளன. உள்ளடக்கிய நிர்வாகம் என்பது, காலநிலை மாற்றத்தினை தழுவுவதில் முக்கியமானது என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.[9]

இலங்கையை பொறுத்தவரை: இந்த உலகளாவிய உதாரணங்கள் அனைத்திலும் ஒரு பொதுவான விடயம் காணப்படுகின்றது. வெற்றிக்கு சமூகங்களின் உரிமைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்குதல், நிதியை நேரடியாக பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் தீர்மானங்களை எடுப்பதில் உண்மையான அதிகாரம் ஆகியவை அவசியமாகின்றன. சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் மற்றும் இணை நிர்வாகம் தொடர்பான இலங்கையின் நடைமுறைகள், பரிசோதிக்கப்படாத ஒரு முயற்சி அல்ல என்பதையும், உலகளவில் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடைமுறைகளுடன் ஒத்துப்போகின்றன என்பதையும் இந்த உதாரணங்கள் உறுதிப்படுத்துகின்றன. தனது கரையோர சமூகங்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலம், உள்ளூர் வளப் பாதுகாப்பை தேசிய அளவிலான மாற்றங்களை எதிர்கொள்ளும் திறனாக மாற்றும் இந்த உலகளாவிய இயக்கத்தில் இலங்கையும் இணைய முடியும்.

உலகளாவிய சிறந்த நடைமுறை: 30X30 மற்றும் சமூகங்கள் முன்னெடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் ஏன் முக்கியமானது

சிறந்த நடைமுறைக்கு அமைவான FPIC செயன்முறையானது, ஒரு செயற்திட்டம், பாதுகாக்கப்பட்ட பகுதி, பாதுகாப்பு தொடர்பான கட்டுப்பாடு அல்லது காலநிலை தொடர்பான நடவடிக்கை ஆகியவை இறுதியாக தீர்மானிக்கப்படுவதற்கு முன்னரே ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்படும் அனைத்து உரிமையாளர்களும் இயற்கை வளங்களை பயன்படுத்துபவர்களும் அடையாளம் காணப்பட வேண்டும். அவர்களின் சொந்த பிரதிநிதித்துவ அமைப்புகள் ஊடாக அவர்களுடன் கலந்துரையாட வேண்டும். அனைவருக்கும் புரியும் மொழிகளிலும் எளிதில் அணுகக்கூடிய வடிவங்களிலும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும். சமூகங்கள் தங்களுக்குள் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார ரீதியான அபாயங்கள் வெளிப்படையாக தெரிவிக்கப்படுவதுடன், மாற்று வழிகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். சமூகத்தின் தீர்மானம் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிலும் சமூகங்களுக்கு தொடர்ந்து பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஒப்புதல் வழங்கப்படாதபோது அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படாதபோது, தெளிவானதும் அனைவருக்கும் அணுகக்கூடியதுமான முறைப்பாட்டு வழிமுறையின் ஊடாக, அதிகாரிகள் வெளிப்படையான காரணங்களுடன் பதிலளிக்க வேண்டும். இதன் மூலம் தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்கும் உரிய நிவாரணத்தை பெறுவதற்கும் பாதுகாப்பான வழி வழங்கப்பட வேண்டும்.

உலகளாவிய சிறந்த நடைமுறை 1: அவுஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களால் நிர்வகிக்கப்படும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள்

அவுஸ்திரேலியாவின் பழங்குடியின மக்களால் நிர்வகிக்கப்படும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (ஜீயு) திட்டமானது, பாரம்பரிய உரிமையாளர்களின் தலைமைத்துவம் மற்றும் உடன்பாட்டின் மூலம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பதற்காக பாரம்பரிய உரிமையாளர்கள் நிர்வகிக்க ஒப்புக்கொண்ட நிலம் மற்றும் கடல் பகுதிகளே ஜீயுக்கள் என அவுஸ்திரேலிய அரசாங்கம் குறிப்பிடுகின்றது.ஜ10ஸ அரசாங்கம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் எல்லைகளையும் நோக்கங்களையும் ஏற்கனவே தீர்மானித்த பின்னர், பழங்குடியின சமூகங்களை வெறுமனே ஆலோசனை வழங்குபவர்களாக கருதுவதற்கு பதிலாக, பாதுகாப்பு நடவடிக்கைகளின் நிர்வாகத்தில் அவர்களின் ஆளுகை மற்றும் கலாசார அதிகாரத்தை மையப்படுத்துவதால் இந்த மாதிரி முக்கியத்துவம் பெறுகின்றது.

அவுஸ்திரேலியாவின் இந்த மாதிரியை இலங்கையில் மாற்றங்களுக்கு உட்படுத்தாமல் அப்படியே பின்பற்ற முடியாது. எனினும், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான கொள்கைகளில் சமூகங்களின் அதிகாரம், பாரம்பரிய அறிவு, கலாசார முன்னுரிமைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஊதியம் வழங்கப்படும் வளப் பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றை அங்கீகரிக்க முடியும். குறிப்பாக, சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இணை நிர்வாகம் அல்லது சமூகங்களால் பாதுகாக்கப்படும் பகுதிகளை உருவாக்குவது குறித்து ஆராய்வதற்கு இது ஆதரவளிக்கின்றது. இத்தகைய பகுதிகளில், மீனவ சமூகங்கள் வலயங்களை வரையறுத்தல், கண்காணித்தல், மீளமைத்தல் மற்றும் சட்ட அமுலாக்கம் ஆகியவற்றில் பங்கேற்பதுடன், தீர்மானங்களை எடுப்பதற்கான அதிகாரங்களும் அரசாங்கத்தின் தெளிவான ஆதரவும் வழங்கப்பட வேண்டும்.

உலகளாவிய சிறந்த நடைமுறை 2: பழங்குடியின மற்றும் பாரம்பரிய பிரதேசங்களை தனியான பாதுகாப்பு அணுகுமுறையாக அங்கீகரித்தல்

சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் (IIED) மேற்கொண்ட உலகளாவிய ஆய்வின்படி, அரசாங்கங்களால் பிரகடனப்படுத்தப்படும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் ழுநுஊஆகளுக்கு இணையாக, பழங்குடியின மற்றும் பாரம்பரிய பிரதேசங்கள் இலக்கு 3க்கு பங்களிக்கும் தனியான, அதேயளவான முக்கியத்துவம் வாய்ந்த அணுகுமுறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். உயிரியல் பல்வகைமை நிறைந்த பல பகுதிகள் ஏற்கனவே சமூக அமைப்புகள், பாரம்பரிய விதிமுறைகள், கலாசார நடைமுறைகள் மற்றும் உள்ளூர் ரீதியாக உருவாக்கப்பட்ட வள நிர்வாக முறைகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த அணுகுமுறை எடுத்துக்காட்டுகின்றது. உலகளாவிய நிலப்பரப்பிலும் அதனுடன் தொடர்புடைய உள்நாட்டு நீர்நிலைகளிலும் குறைந்தது 32 வீதத்தை பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர் அல்லது நிர்வகிக்கின்றனர் என்றும், இவற்றில் பல பகுதிகள் இன்னும் சிறந்த சுற்றுச்சூழல் நிலையில் உள்ளன என்றும் IIED தெரிவிக்கின்றது.[11]

சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம் (IIED) மேற்கொண்ட உலகளாவிய ஆய்வின்படி, அரசாங்கங்களால் பிரகடனப்படுத்தப்படும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் ழுநுஊஆகளுக்கு இணையாக, பழங்குடியின மற்றும் பாரம்பரிய பிரதேசங்கள் இலக்கு 3க்கு பங்களிக்கும் தனியான, அதேயளவான முக்கியத்துவம் வாய்ந்த அணுகுமுறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். உயிரியல் பல்வகைமை நிறைந்த பல பகுதிகள் ஏற்கனவே சமூக அமைப்புகள், பாரம்பரிய விதிமுறைகள், கலாசார நடைமுறைகள் மற்றும் உள்ளூர் ரீதியாக உருவாக்கப்பட்ட வள நிர்வாக முறைகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த அணுகுமுறை எடுத்துக்காட்டுகின்றது. உலகளாவிய நிலப்பரப்பிலும் அதனுடன் தொடர்புடைய உள்நாட்டு நீர்நிலைகளிலும் குறைந்தது 32 வீதத்தை பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர் அல்லது நிர்வகிக்கின்றனர் என்றும், இவற்றில் பல பகுதிகள் இன்னும் சிறந்த சுற்றுச்சூழல் நிலையில் உள்ளன என்றும் IIED தெரிவிக்கின்றது.[11]

உலகளாவிய சிறந்த நடைமுறை 3: உயிரியல் மற்றும் கலாசார பிரதேசங்களும் சமூக நல்வாழ்வும்

உயிரியல் மற்றும் கலாசார பிரதேச அணுகுமுறையானது, உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை கலாசாரம், வாழ்வாதாரங்கள், உணவு முறைகள், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றுடன் இணைக்கின்றது. உயிரியல் மற்றும் கலாசார பிரதேசங்கள் என்பது, சமூகங்கள் உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பதுடன், கலாசார நடைமுறைகள், உள்ளூர் உணவு முறைகள், சூழலியல் அறிவு மற்றும் சமூக நல்வாழ்வையும் பேணிப் பாதுகாக்கும் பகுதிகள் என IIED குறிப்பிடுகின்றது. பெரு நாட்டிலுள்ள உருளைக்கிழங்கு பூங்கா இதற்கு ஓர் உதாரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது. விவசாயப் பல்வகைமையை பாதுகாத்தல், பாரம்பரிய பரிமாற்ற முறைகள் மற்றும் தமது பிரதேசத்துடனான கலாசார உறவுகளை பேணுதல் ஆகியவற்றில் அங்குள்ள கெச்சுவா சமூகங்கள் ஈடுபட்டுள்ளன.[12]

இது இலங்கையின் கரையோரப் பகுதிகளுக்கு பொருத்தமானதாக இருப்பதற்கான காரணம், பாதுகாப்பு நடவடிக்கைகளின் நோக்கங்கள் சமூகங்களின் மதிப்புகள்

உயிரியல் மற்றும் கலாசார பிரதேச அணுகுமுறையானது, உயிரியல் பல்வகைமை பாதுகாப்பை கலாசாரம், வாழ்வாதாரங்கள், உணவு முறைகள், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றுடன் இணைக்கின்றது. உயிரியல் மற்றும் கலாசார பிரதேசங்கள் என்பது, சமூகங்கள் உயிரியல் பல்வகைமையை பாதுகாப்பதுடன், கலாசார நடைமுறைகள், உள்ளூர் உணவு முறைகள், சூழலியல் அறிவு மற்றும் சமூக நல்வாழ்வையும் பேணிப் பாதுகாக்கும் பகுதிகள் என IIED குறிப்பிடுகின்றது. பெரு நாட்டிலுள்ள உருளைக்கிழங்கு பூங்கா இதற்கு ஓர் உதாரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது. விவசாயப் பல்வகைமையை பாதுகாத்தல், பாரம்பரிய பரிமாற்ற முறைகள் மற்றும் தமது பிரதேசத்துடனான கலாசார உறவுகளை பேணுதல் ஆகியவற்றில் அங்குள்ள கெச்சுவா சமூகங்கள் ஈடுபட்டுள்ளன.[12]

இது இலங்கையின் கரையோரப் பகுதிகளுக்கு பொருத்தமானதாக இருப்பதற்கான காரணம், பாதுகாப்பு நடவடிக்கைகளின் நோக்கங்கள் சமூகங்களின் மதிப்புகள்

7. பரிந்துரைகள்



மன்னார் மீனவ சமூகத்தினர், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

இலங்கையின் உயிரியல் பல்வகைமை மற்றும் காலநிலை தொடர்பான நிர்வாகத்தை மனித உரிமை தரநிலைகளுடன் ஒருங்கிணைத்து, பயனுள்ள பெறுபேறுகளை உறுதி செய்வதற்காக, அரசாங்கம் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும் என நாம் கோருகின்றோம்:

7.1. சட்டம் மற்றும் கொள்கை சீர்திருத்தம்

தேசிய சுற்றுச்சூழல் சட்டமூலத்தை திருத்துதல்: சமூகங்களின் நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் கட்டாயமான சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதல் (ழுஐஊ) பெறப்பட வேண்டும் என்ற தேவையை உள்ளடக்குதல்.

மொழி உரிமையை உறுதி செய்தல்: அனைத்து அறிவித்தல்கள், ஆலோசனைகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் (தேவைப்படும் இடங்களில் ஆங்கிலத்திலும்) மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை சட்ட ரீதியாக கட்டாயமாக்குதல். இதன் மூலம் மொழித் தடைகள் காரணமாக எந்தவொரு சமூகமும் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அத்துடன், ஆவணங்களைப் படித்து புரிந்துகொள்ளவும், விளக்கங்களைப் பெறவும், தங்களுக்குள் கலந்துரையாடவும், தமது கருத்துக்களையும் ஆட்சேபனைகளையும் சமர்ப்பிக்கவும் சமூகங்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

"பாதிக்கப்படும் சமூகம்" என்பதற்கான வரையறை: பாரம்பரிய உரிமைகளைக் கொண்ட சமூகங்களை பொதுவான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிடமிருந்து சட்ட ரீதியாக வேறுபடுத்தி வரையறுத்தல். இதன் மூலம், இத்தகைய சமூகங்களின் பங்கேற்புக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

நீதிமன்றத்தை அணுகுவதற்கான தடைகளை நீக்குதல்: அனைத்து சுற்றுச்சூழல் உரிமம் வழங்கும் தீர்மானங்களையும் நீதிமன்றத்தின் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கான உரிமையை மீண்டும் உறுதி செய்தல்.

7.2. NBSAP மற்றும் CBD அறிக்கையிடல

சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஒப்புதலை (FPIC) தேசிய உயிரியல் பல்வகைமை மூலோபாய செயற்திட்டத்தில் (NBSAP) ஒருங்கிணைத்தல்: 2030ஆம் ஆண்டளவில் உயிரியல் பல்வகைமையில் 30 வீதத்தை பாதுகாப்பதற்கான இலக்கை ("30×30") நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய பொறிமுறையாக FPICI மாற்றுதல். ரேகவ பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் ஆமை பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற, சமூகங்கள் முன்னெடுக்கும் ஏனைய பயனுள்ள பிரதேச அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை (OECMs) அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு அணுகுமுறைகளாக ஏற்றுக்கொள்ளுதல்.

சமூகங்களின் பங்களிப்புகளை ஆவணப்படுத்துதல்: உயிரியல் பல்வகைமை தொடர்பான சமவாயத்திற்கு (ஊடீனு) சமர்ப்பிக்கப்படும் 7ஆவது தேசிய அறிக்கையில், நிர்வாகத்தில் காணப்படும் இடைவெளிகள் தொடர்பாக சமூகங்கள் வழங்கிய சரிபார்க்கப்பட்ட சாட்சியங்கள் வெளிப்படையாக உள்ளடக்கப்படுவதை உறுதி செய்தல். இதில் கற்பிட்டி, நீர்கொழும்பு, ரேகவ, வாகரை மற்றும் விடத்தல்தீவு ஆகிய பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட சம்பவங்களும் உள்ளடங்க வேண்டும்.

7.3. ஒப்புதலை நடைமுறைப்படுத்துதல்

தகவல் தொடர்பு வழிமுறைகளை சீர்திருத்துதல்: அதிக பணிச்சுமையைக் கொண்ட கிராம சேவகர்களை மட்டுமே தகவல் தொடர்புக்கான முக்கிய வழிமுறையாக பயன்படுத்துவதை தவிர்த்தல். கற்பிட்டியில் பரிந்துரைக்கப்பட்டதை போன்று, ஆலோசனைகள் மற்றும் தகவல் பகிர்வுக்கான முதன்மை வழிமுறைகளாக ஏற்கனவே செயற்பட்டு வரும் மீனவர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள் மற்றும் கிராம மட்ட சங்கங்களை பயன்படுத்துதல்.

சமூகங்கள் முன்னெடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னோடி திட்டமாக நடைமுறைப்படுத்துதல்: விடத்தல்தீவு, ரேகவ, கற்பிட்டி மற்றும் வடக்கு மன்னார் ஆகிய பகுதிகளில் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இணை நிர்வாக வலயங்களை முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்துதல். இப்பகுதியில் வலயங்களை வரையறுத்தல், சுற்றுலா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், சட்டவிரோத மீன்பிடிக்கு எதிரான சட்ட அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவை தொடர்பாக சமூகங்களுக்கு இணைந்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக செயற்படுபவர்களை பாதுகாத்தல்: குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் சுற்றுச்சூழல் மற்றும் மனித உரிமைகளுக்காக செயற்படுபவர்களுக்கு கடுமையான பாதுகாப்பை உறுதி செய்தல்.

7.4. காலநிலை பொறுப்புக்கூறல்

சமூகங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதியை உருவாக்குதல்: வழக்குத் தொடர வேண்டிய அவசியமின்றி, காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய இழப்பு மற்றும் சேதங்களுக்கான சுற்றுச்சூழல் மீளமைப்பு நிதியை, சமூகங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் எளிமையான பொறிமுறையை உருவாக்குதல்.

சுற்றுச்சூழல் மாற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்தல்: பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மாற்றங்கள் தொடர்பாக சுயாதீனமான விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொள்ளுதல். உதாரணமாக, கடல் மட்டம் மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு, கடலரிப்பு, உவர்த்தன்மை கொண்ட மழை, தாவரங்கள் கறுப்பாகுதல், கடற்புற் படுகைகள் சீரழிதல் மற்றும் பருவகால முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, அதன் பெறுபேறுகளை காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான திட்டமிடலில் உள்ளடக்குதல்.



இரணைதீவு மீனவ சமூகத்தினர், மே 2026 **(©Greenpeace)**

7.5. உயிரியல் பல்வகைமைக்கான நிதியைப் பெறுதல்: வாக்குறுதிகளிலிருந்து நேரடியாக நிதியை பெறுவதற்கு

"30×30" இலக்கை அடைவதற்கும் பயனுள்ள காலநிலை மாற்றத் தழுவல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கொள்கை சீர்திருத்தம் மட்டுமன்றி, நம்பகமான நிதி வசதியும் அவசியமாகும். உயிரியல் பல்வகைமை தொடர்பான சமவாயத்தின் (CBD) கீழ் குறிப்பிடத்தக்க அளவிலான உலகளாவிய நிதி உள்ளது. எனினும், இலங்கையில் தற்போதுள்ள நிதி வழிமுறைகள் மத்தியில் (centralized) அதிகமாக குவிந்துள்ளதால், இயற்கை வளங்களை பாதுகாப்பதில் மிகவும் பயனுள்ளதாக செயற்படும் சமூகங்களை நிதி சென்றடைவது தடுக்கப்படுகிறது.

கிடைக்கக்கூடிய நிதி வழிமுறைகள்:

- GEF நம்பிக்கை நிதியம் மற்றும் உலகளாவிய உயிரியல் பல்வகைமை கட்டமைப்பு நிதியம் (GBFF): உயிரியல் பல்வகைமை தொடர்பான சமவாயத்தை (CBD) நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய நிதி வழிமுறைகளாக இவை உள்ளன. இலங்கை தற்போது GEF-9 STAR ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 9.93 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை பெறுவதற்கான வாய்ப்பினை கொண்டுள்ளது. GBFF, குறிப்பாக குன்மிங் மொன்றியல் உலகளாவிய உயிரியல் பல்வகைமை கட்டமைப்பின் (KMGBF) இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், அதன் நிதியில் 20 வீதத்தை பழங்குடியின மக்களுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் (IPLCs) வழங்க வேண்டும் என்ற ஏற்பாட்டையும் கொண்டுள்ளது. எனினும், நிதியைப் பெறுவதற்கு பெரும்பாலும் செயற்திட்ட அடிப்படையிலான விண்ணப்பம் தேவைப்படுவதுடன், அரசாங்கத்தின் ஒப்புதலும் நிறுவனங்களின் ஊடான ஒருங்கிணைப்பும் அவசியமாகின்றன. இதனால், சமூகங்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது.

- கலி நிதியம் (Cali Fund): டிஜிட்டல் வரிசை தகவலிலிருந்து (DSI) கிடைக்கும் நன்மைகளை பகிர்ந்துகொள்வதற்காக COP16 (2024)இல் உருவாக்கப்பட்ட புதிய நிதி வழிமுறையாகும். அதன் வளங்களில் குறைந்தது 50 வீதம் பழங்குடியின மக்களும் உள்ளூர் சமூகங்களும் (IPLCs) தாங்களாக அடையாளம் காணும் தேவைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நேரடியாக நிதி வழங்குவதும் உள்ளடங்கும். இதன் நடைமுறைப்படுத்தல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், 2025ஆம் ஆண்டின் பிற்பகுதியில் முதலாவது பங்களிப்பு கிடைத்துள்ளது. எனவே, சமூகங்களுக்கு நேரடியாக நிதி வழங்குவதற்கான முக்கியமான வாய்ப்பாக இது அமைகின்றது.

- GEF சிறிய நிதியுதவித் திட்டம் (SGP): தற்போது சமூகங்களுக்கு மிகவும் நடைமுறைக்கு ஏற்ற நிதியைப் பெறுவதற்கான வாய்ப்பாக இது உள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டம், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகங்கள் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு நேரடியாக நிதியளிக்கின்றது. இதன் முந்தைய கட்டத்தில் மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரையிலான கரையோரப் பகுதி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கடல் வளப் பாதுகாப்புக்கான சமூக முயற்சிகளுக்கு இது நடைமுறையில் சாத்தியமானது என்பதை நிரூபித்துள்ளது. 8ஆவது செயற்பாட்டு கட்டம் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றது.

நிதியை பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடைவெளி: இந்த நிதி வளங்கள் இருந்தபோதிலும், இலங்கை சமூகங்கள் பல்வேறு தடைகளை எதிர்கொள்கின்றன. சிக்கலான விண்ணப்ப நடைமுறைகள், உள்ளூர் மொழிகளில் போதுமான தகவல்கள் இல்லாமை மற்றும் நிதியை இயற்கை வளங்களை பாதுகாத்து பராமரிக்கும் சமூகங்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு பதிலாக, தேசிய வரவு செலவுத் திட்டங்களின் ஊடாக வழங்கும் முறை ஆகியவை இதில் அடங்குகின்றன. உண்மையான "நேரடி நிதி பெறுகை" என்பது, நிதி எந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளித்து பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை சமூகங்களே தீர்மானிப்பதையும், நிதி தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான தேவைகள் நிதியின் அளவுக்கும் செயற்பாடுகளுக்கும் ஏற்றவாறு இருப்பதையும், நிதி நிர்வாகத்தில் சமூகங்கள் பங்கேற்பதையும் குறிக்கும்.

குறிப்பு : இலங்கைக்கான உயிரியல் பல்வகைமை நிதியானது கடன்கள் அல்லது ஏனைய கடன் வடிவங்களில் வழங்கப்படுவதற்குப் பதிலாக, மானியங்களாகவும் இழப்பீடுகளாகவும் வழங்கப்பட வேண்டும். உலகின் தெற்கில் இருந்து வரலாற்று ரீதியாக வளங்களை சுரண்டிய அல்லது அதன் கடன் சுமைக்கு பங்களித்த நிறுவனங்களே, அதன் உயிரியல் பல்வகைமை எவ்வாறு மதிப்பிடப்பட வேண்டும் மற்றும் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதையும் கட்டுப்படுத்தும் போது "சுற்றுச்சூழல் காலனித்துவம்" ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால், சமூகங்கள் தமது நிலங்கள் மற்றும் இயற்கை வளங்களின் உரிமையாளர்களாகவும் பாதுகாவலர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்கு பதிலாக, வெறுமனே செயற்திட்டங்களின் பயனாளர்களாக கருதப்படும் நிலை ஏற்படலாம்.

எனவே, உயிரியல் பல்வகைமைக்கான நிதியை மதிப்பிடும்போது, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. மாறாக, யார் அந்த நிதி வளங்களை கட்டுப்படுத்துகின்றனர், யார் தீர்மானங்களை எடுக்கின்றனர், மேலும் முன்னுரிமைகளை தீர்மானிப்பதிலும் நிதியை நிர்வகிப்பதிலும் சமூகங்களுக்கு நேரடியான பங்கு உள்ளதா என்பதன் அடிப்படையிலேயே மதிப்பிட வேண்டும்.



இரணைதீவு, மே 2026 **(©Greenpeace)**

நிதியியல் நீதிக்கான பரிந்துரைகள்: இலங்கையின் நிதி கட்டமைப்பை அதன் மனித உரிமைக் கடப்பாடுகளுடன் ஒருங்கிணைப்பதற்காக, அரசாங்கமும் நிதி வழங்குநர்களும் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும் என நாம் கோருகின்றோம்:

1. நேரடி நிதி பெறுகையை நடைமுறைப்படுத்துதல்: சமூகங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கான GBFF இன் 20 வீத இலக்கும், Cali Fund இன் 50 வீத ஒதுக்கீடும், தேவையற்ற அரசாங்க இடைத்தரகர்களைத் தவிர்த்து, நேரடி நிதி பெறுகை முறையின் ஊடாக வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். சமூகங்களே அடையாளம் காணும் நிறுவனங்களின் ஊடாக நிதியை பெறுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

2. நாடு முழுவதும் உள்ள கரையோர சமூகங்களுக்கு GEF-SGP 8ஆவது செயற்பாட்டு கட்டத்திற்கு முன்னுரிமை வழங்குதல் : எதிர்வரும் GEF-SGP 8ஆவது செயற்பாட்டு கட்டத்தில், சமூகங்கள் முன்னெடுக்கும் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ழுநுஊஆகளுக்கு சுற்றுச்சூழல் அமைச்சும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் வெளிப்படையாக முன்னுரிமை வழங்க வேண்டும்.

- உடனடி கவனம் : மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரையிலான பகுதியில் முந்தைய செயற்பாட்டு கட்டத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும், வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தின் பின்னரான பகுதிகளில் காணப்படும் கடுமையான பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, நிலப் பயன்பாட்டு உரிமைகள் மற்றும் இராணுவமயமாக்கல் தொடர்பான தடைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த பகுதிகளுக்கு என தனியான நிதி ஒதுக்கீட்டு வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

- தேசிய அளவில்: சுற்றுலா மற்றும் கைத்தொழில் திட்டங்களால் இடம்பெயர்வை எதிர்கொள்ளும் மேற்கு (உதாரணமாக, நீர்கொழும்பு) மற்றும் தெற்கு (உதாரணமாக, ரேகவ) பகுதிகளில் உள்ள பாதிப்புக்குள்ளாகும் கரையோர மீனவ சமூகங்களும் இந்த நிதியை பெறுவதற்கான தகுதியை கொண்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- நோக்கம்: நிதியை பெறுவதற்கான வாய்ப்பு புவியியல் அமைவிடத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்காமல், சூழலியல் தேவைகள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பு பொறுப்பை ஏற்று செயற்படும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும். அத்துடன், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இலகுபடுத்தப்பட்ட விண்ணப்ப நடைமுறைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: கடந்த 5 ஆண்டுகளில் சர்வதேச உயிரியல் பல்வகைமை நிதியில் (GEF, GBFF) சமூகங்கள் முன்னெடுக்கும் அமைப்புகளை எவ்வளவு நிதி சென்றடைந்துள்ளது என்பதை தெளிவாக வெளியிட வேண்டும். FPICஐ மதிக்கத் தவறும் நிதிச் செயற்திட்டங்களுக்காக சமூகங்கள் முறைப்பாடு செய்யக்கூடிய பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

NBSAPஇல் நிதியை ஒருங்கிணைத்தல்: இலங்கையின் இறுதி செய்யப்படும் NBSAP (2026 முதல் 2030 வரை) இல், சமூகங்கள் Cali Fund மற்றும் GBFF நிதியை அதிகாரத்துவத் தடைகள் இன்றி
4. பெறுவதற்கான வழிமுறைகளைத் தெளிவாகக் குறிப்பிடும் உயிரியல் பல்வகைமை நிதித் திட்டம் உள்ளடக்கப்பட வேண்டும்.

முக்கிய விடயம் : நிதியை பெறுவதற்கான வாய்ப்பும் பொறுப்புக்கூறலும் இல்லாத நிதி, வெறுமனே ஒரு வாக்குறுதியாகவே இருக்கும். இலங்கை தனது உலகளாவிய கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமெனில், நிதி செல்லும் வழியும் இயற்கை வளங்களை பாதுகாத்து பராமரிக்கும் சமூகங்களின் பொறுப்பும் ஒன்றுக்கொன்று இணைந்திருக்க வேண்டும். அதாவது, எமது கரையோரங்களை பாதுகாத்து வரும் சமூகங்களை நிதி நேரடியாக சென்றடைய வேண்டும்.

முடிவு : கட்டுப்பாடா அல்லது இணைந்து செயற்படுவதா?



விடத்தல்தீவு பாதுகாக்கப்பட்ட பிரதேசம், ஓகஸ்ட் 2026 **(©Greenpeace)**

இந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் யாவும் மறுக்க முடியாதவை. கற்பிட்டியில் தெரிவிக்கப்பட்ட உவர்த்தன்மை கொண்ட மழை முதல் இரணைதீவில் குறைந்து வரும் மீன்வளம் வரை, சுற்றுச்சூழல் தொடர்பான எச்சரிக்கை அறிகுறிகள் தீவிரமாக தென்படுகின்றன. அதேவேளை, சமூக ரீதியான எச்சரிக்கை அறிகுறிகளும் அவசர கவனம் தேவைப்படுவதாக உள்ளன. ரேகவ பகுதியில், ஒரு மீனவரின் ஆலோசனை புறக்கணிக்கப்பட்டதால் ஒரு துறைமுகமே சீரழிந்து வருவதை பார்க்கும்போதும், வாகரையில் ஒரு ஆதிவாசித் தலைவர் தனது மூதாதையர்கள் பயன்படுத்திய நிலத்தில் நடந்து சென்றதற்காக கைது செய்யப்படும்போதும், அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான சமூக ஒப்பந்தம் முறிவடைகின்றது. இதற்கிடையில், நீர்கொழும்பில் பாரம்பரியமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள், குளப்பின் இறால் மற்றும் ஏனைய நீர்வாழ் வளங்கள் நாளுக்கு நாள் மாசுபடுத்தப்பட்டு அழிக்கப்படுவதை செய்வதறியாது பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் பாரம்பரிய மீன்பிடித் தளங்களும் வாழ்வாதாரங்களும் தொடர்ந்து சீரழிந்து வருகின்றன. அதேவேளை, அவர்களின் அறிவும் கரிசனைகளும் பல சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்படுகின்றன.

இலங்கை தற்போது ஒரு தீர்க்கமான கட்டத்தில் உள்ளது. ஒரு பாதை, தற்போதைய நிலைமையையே தொடர்கிறது: தீர்மானங்கள் கொழும்பில் எடுக்கப்பட்டு, கரையோர பகுதிகளில் திணிக்கப்பட்டு, பொலிஸாரால் அமுல்படுத்தப்படும் மேலிருந்து கீழ் நோக்கிய "கட்டுப்பாட்டு" அணுகுமுறை இதுவாகும். இந்தப் பாதை மேலும் பல மோதல்களுக்கும், தோல்வியடைந்த உட்கட்டமைப்பு திட்டங்களுக்கும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த நாட்டை பாதுகாத்து வந்த பாரம்பரிய அறிவை மீள முடியாத வகையில் இழப்பதற்கும் வழிவகுக்கும். இது சமூகங்களை வளங்களாக அன்றி சுமைகளாக பார்க்கும் அணுகுமுறையாகும்.

மற்றைய பாதை சம்மதம் மற்றும் ஒத்துழைப்பின் பாதையாகும். இது புதிய சட்டமொன்றோ, உயரமான வேலியொன்றோ அல்ல, மாறாக உள்ளூர் சமூகங்களின் சம்மதமும் பாதுகாவல் பொறுப்புணர்வுமே தன்னிடம் உள்ள மிகச் சிறந்த பாதுகாப்புக் கருவி என்பதை அரசாங்கம் அங்கீகரிக்கும் பாதை இதுவாகும். மக்களை இடம்பெயர் செய்வதன் மூலம் அன்றி, அவர்களுக்கு அதிகாரமளிப்பதன் மூலம் "30X30" பல்லுயிர்ப் பாதுகாப்பு இலக்கை அடையும் பாதை இதுவாகும். உள்ளூர் சமூகங்களின் உரிமைகளை மதிப்பதற்கும், அவர்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துவதற்குமான சர்வதேச நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட சட்டப்பூர்வ கடப்பாடுகள், தேசிய கொள்கையின் அடிப்படைக் கட்டமைப்பிலேயே பின்னிப் பிணைக்கப்படும் பாதை இதுவாகும்.

தேர்வு தெளிவாக உள்ளது. கடலை பற்றி மிகச் சிறந்த அறிவைக் கொண்ட சமூகங்களுக்கு எதிராக தொடர்ந்து போராடலாம் அல்லது அவர்களுடன் இணைந்து செயற்படலாம்.

CBD COP17-க்கு தயாராகி வரும் கொள்கை வகுப்பாளர்களுக்கு: சமூகங்கள் தயாராக உள்ளன. அவர்கள் தமது அறிவையும், உழைப்பையும், பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பையும் வழங்க முன்வந்துள்ளனர். அதற்கு பதிலாக அவர்கள் கேட்பது ஒரேயொரு விடயமாகும். அதாவது, தீர்மானங்கள் எடுக்கப்படும் இடத்தில் தங்களுக்கும் ஓர் இடமும், தங்களது எதிர்காலத்தை வடிவமைக்கவுள்ள திட்டங்களுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று கூறுவதற்கான உரிமையும் என்பதே அது.

ஆலோசனையிலிருந்து சம்மதத்தை நோக்கி நகர்வோம். கட்டுப்பாட்டிலிருந்து ஒத்துழைப்பை நோக்கி நகர்வோம். ஏனெனில் மக்களின்றி பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பின்றி எதிர்காலமும் இல்லை.



"நாங்கள்தான் கடலில் மீன்பிடித்து, கடலுடன் இணைந்து தொழில் செய்கின்றோம்"

"திட்டங்கள் அல்லது தீர்மானங்களின் போது நிலைமையை புரிந்துகொண்டு, மீனவர்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டால், அவை எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுமென நாம் கருதுகின்றோம்."

பி.கே. பத்மசிறி, களப்பு மீன்பிடி சங்க உறுப்பினர், ரேகவ

பி.கே. பத்மசிறி, களப்பு மீன்பிடி சங்க உறுப்பினர், ரேகவ, ஜூன் 2026 **(©Greenpeace)**

மேற்கோள்கள் :

https://www.ohchr.org/en/indigenous-peoples/consultation-and-free-prior-and-informed-consent-fpic

பழங்குடியின மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனம்:
https://www.ohchr.org/en/indigenous-peoples/un-declaration-rights-indigenous-peoples

தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான சிவில் சமூகத்தின் பரிந்துரைகள்:
https://www.greenpeace.org/southasia/publication/21625/civil-society-recommendations-on-the-national-environmental-amendment-bill/

பழங்குடியின மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பிரகடனம்:
https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/Declaration-indigenous-en.pdf

குன்மிங்-மொன்றியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பு (இலக்கு 22): ***https://www.cbd.int/gbf/targets/22***

சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்து (23 ஜூலை 2025, வழக்கு இல. 187):
https://icj-web.leman.un-icc.cloud/sites/default/files/case-related/187/187-20250723-adv-01-00-en.pdf

Andavadoaka பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஒக்டோபஸ் மீன்பிடி தடைக்காலம், முதல் ஆண்டுக்குள் ஒக்டோபஸ் பிடிப்பில் 90□ அதிகரிப்பையும், குடும்ப வருமானத்தில் குறிப்பிடத்தக்க உயர்வையும் ஏற்படுத்தியது. ***Blue Ventures***. (2020). ***Velondriake***: சமூகங்கள் தலைமையிலான மடகஸ்கர் பாதுகாப்பு முயற்சி:
https://blueventures.org/who-we-are/madagascar/

Alcala, A. C., & Russ, G. R. (2006). பிலிப்பைன்ஸில் மீன்பிடி தடையுள்ள கடல் காப்பகங்கள் மற்றும் பவளப்பாறை மீன்பிடி வள முகாமைத்துவம்: மக்கள் அதிகாரத்தின் புதிய புரட்சி:
https://www.researchgate.net/publication/6804004_No-take_Marine_Reserves_and_Reef_Fisheries_Management_in_the_Philippines_A_New_People_Power_Revolution

ICCA Consortium – Kawawana பிரதேசத்தின் சுயவிவரம் ***(12/03/2021):***
https://report.territoriesoflife.org/territories/kawawana-senegal/

அவுஸ்திரேலிய அரசாங்கம். காலநிலை மாற்றம், வலுசக்தி, சுற்றாடல் மற்றும் நீர்வளத் திணைக்களம் ***(10/08/2026):***
https://www.dcceew.gov.au/environment/land/indigenous-protected-areas

சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம். 30ஒ30 இலக்கை அடைதல்: பழங்குடியின மற்றும் பாரம்பரிய பிரதேசங்கள், உரிமைகள் மற்றும் ஆட்சிமுறையின் முக்கிய பங்கு ***(27/08/2026):***
https://www.iied.org/achieving-30x30-vital-role-indigenous-traditional-territories-rights-governance

சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனம். உயிரியல்-கலாசார பிரதேசங்கள்:
https://biocultural.iied.org/biocultural-territories

Greenpeace South Asia இணையதளத்தில் கிடைக்கும் இணைப்புகளின் பட்டியல்:

- கடலோர சமூகங்களுடனான கலந்துரையாடலுக்கான வினாக்கொத்து
- கடலோர சமூகங்கள் தொடர்பான சொற்களஞ்சியம்
- தேசிய சுற்றாடல் சட்டமூலம் தொடர்பில் சுற்றாடல் அமைச்சுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள்
- இலங்கை அரசாங்கத்திற்கான சமூகங்களின் சம்மதக் கடிதம் (பிரதி அனுப்பப்பட்டவர்களின் பட்டியல்)
- சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த சம்மதம் தொடர்பான கருத்துக் கட்டுரை
- கடலோர சமூகங்களின் மேற்கோள்கள்